# தமிழ்முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:2

### தாயகம் சந்தையானால்.....!

நாயகன் கோழையானால் மனைவியை நாயும் பிடித்திழுக்கும்
நல்லவர் ஒதுங்கிப்போனால் சிற்றினம் நாட்டை அடித்தொழிக்கும்
ஓயுதல்கொண்டு உரியவர் படுத்தால் உடைமைகள் பறிபோகும்
உணர்ச்சியில்லாதவர் நாட்டில் செழித்தால் உரிமைகள் பலியாகும்
பாயும்புலிகள் அயர்ந்தால் நரிகள் பல்லாங் குழியாடும்
பாவமென்று பாம்பை வளர்த்தால் படம்தான் எடுத்தாடும்
தாயகம் சந்தையானால் மக்கள் சடுதியில் விலைபோவார்!
தலைவர்கள் என்போர் அலைபவரானால் தொண்டர்கள் கொலையாவார்!

1982 மார்கழி

கொடுதலை! கொடு உயிர்! விடுதலை குமிழ்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முரசின் பார்வையில்

## செய் அல்லது செத்துமடி!
*****************

தமிழீழ விடுதலைப் போராட்டம் நடக்கும் வரலாற்றுச்சிறப்பு மிகு காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம் – பெருமைப்படத்தக்க விடயம்தான். ஆனால் இந்த வரலாற்றுச் சிறப்புமிகு காலகட்டத்தில் ஒவ்வொரு ஈழத் தமிழ் மகனும் விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பைச் சரியாகச் செய்கின்றனரா என்பதே எமது கேள்வியாகும் .. ?

ஆண்ட பரம்பரை பற்றிய கதைகளோ அன்றி அதற்கு முந்தைய பரம்பரை பற்றிய கதைகளோ மட்டும் எமக்குச் சுதந்திரத்தைத் தந்துவிடப் போவதில்லை. "சும்மா கிடைக்கும் சுதந்திரம்" எனச் சுவையாக நூறுகதைகள் சொல்லும் தமிழ் அரசியல் தலைவர்களும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்துவிடப் போவதில்லை.

ஒவ்வொரு தமிழ்மகனும் குறிப்பாக ஒவ்வொரு ஈழத் தமிழ்மகனும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எப்போது தன்னையே அர்ப்பணிக்கத் தயாராகின்றானோ ... அப்போதுதான் சுதந்திரக் காற்று எமது பூமியில் வீசும். இல்லையேல் அடிமை வாழ்வு தொடரும் ... அவலங்களும் தொடரும். மொரீசியசில் எப்படித் தமிழ் அழிந்து தமிழ் இனம் சீர்குலைந்ததோ ... மதகாசுக்கரில், இரெயூனியனில், மர்த்தினிக்குத் தீவுகளில் தமிழ் மொழிக்கு – தமிழ் இனத்துக்கு என்னகதி நேர்ந்ததோ அது ஈழத்திலும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்!

இதையெல்லாம் இன்றைய நிலையில் எத்தனைத் தமிழர்கள் எண்ணிப் பார்க்கின்றார்கள். எண்ணிப் பார்த்திருந்தால் எம் தமிழினத்தை ... மொழியை, கலாச்சாரத்தை முற்றாகவே நிர்மூலமாக்கத்துடிக்கும் சிறீலங்காவின் ஐக்கியத் தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஆயிரக்கணக்கில் வாக்குப் போட்டிருப்பார்களா? வெட்கமாக இருக்கிறது ... வேதனையாகவும்கூட இருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்புக்கள் ... எரிப்புக்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பனைகொடையிலிருந்தும், வெலிக்கடையிலிருந்தும், ஆனையிறவிலிருந்தும் இப்போது குருநகரிலிருந்தும்கூட தடுப்புக்காவலில் கொடும் சித்திரவதைக்குள்ளாகும் தமிழ் இளைஞர்களின் அவலக்குரல்கள் மிதந்து வந்து கொண்டிருக்கின்றன. உயிரோடு எவர் இருக்கின்றார், எவர் கொல்லப்பட்டார் ... எத்தனை பேரது உடல்கள் எங்கே எறியப்பட்டன ... எதுவுமே தெரியாத நிலைமை!

ஆட்டைக் கடித்து ... மாட்டைக் கடித்து ... மனிதனையும் கடித்து இப்போது பரிசுத்தமான ... தெய்வங்களுக்கு நிகரான கிறித்தவ மத குருக்கள்மீதும் பாய்ந்துவிட்டது ஆக்கிரமிப்பு சிங்கள அரசு.

இத்தனை நடந்தும் இன்னும் ஈழத் தமிழினம் மொத்தமாகப் பொங்கி எழவில்லை ... புரட்சி செய்யப்புறப்படவில்லை. ஏன் இந்த நிலை? அடிமை வாழ்வை ... அவலங்களை தமிழன் விரும்புகின்றனா ... அல்லது விடுதலைப் போருக்குத் தம்மை மொத்தமாகவே அர்ப்பணித்த புலிகள் போர் செய்து சுதந்திரத்தைப்பெற நாம் சும்மா இருந்து சுகமாக அனுபவிப்போம் என்று தமிழன் நினைக்கிறனா? இதில் எங்கேயோ ஓட்டை இருக்கிறது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. தமிழ்மக்களின் உணர்ச்சிகளைக் குன்றச்செய்த பொறுப்பைத் தமிழ்மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களே ஏற்கவேண்டும்.

மக்களை உணர்ச்சிகளைப் பிரதிபலிக்காமல் தமது சுய விருப்பத்திற்கமைய சதுரங்கமாட முற்பட்ட தலைமை, ஆக்கிரமிப்பு எதிரியை சிதறல் சிதறல் ஆக்குவதற்குப் பதிலாகத் தாமே சிதறல்கள் ஆகிக் கொண்டிருக்கும் தமிழீழ இயக்கங்கள் ... இவற்றிற்கெல்லாம் நாம் சொல்வது ஒன்றுதான். "விடுதலை நாளை மேலும் பின்தள்ளாதீர்கள். தமிழீழ விடுதலை சக்திகளை ஒருமுனைப்படுத்துங்கள். வெற்றிகள் குவியும்! விடுதலை விரைந்து வரும்!" இயக்கங்களைப் பலமுனைப்படுத்துவது என்பது இலட்சியத்தை பலவீனப்படுத்துவதற்கு ஒப்பாகும். சரித்திரங்களாகவுள்ள அன்றைய புரட்சிகளோ அல்லது சம்பவங்களாகவுள்ள இன்றைய புரட்சிகளோ இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

இவை எல்லாவற்றையும்விட மேலாக அதாவது இயக்கங்களினதும் தலைவர்களதும் கடமைகட்கு மேலாக ஒவ்வொரு ஈழத்தமிழ்மகனுக்குமான கடமையே முக்கியமானதாகும். ஒவ்வொரு ஈழத்தமிழ்மகனும் விடுதலை வேள்விக்குத் தன்னை முற்றாகவே அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு "செய் அல்லது செத்து மடி" என்னும் உறுதியான கொள்கை ஒவ்வொரு தமிழ்மகனது மனத்திலும் வேரூன்ற வேண்டும். இந்தக்கொள்கையே தமிழீழத்தில் விவசாய, தொழிலாள, மாணவ வர்க்கங்களை ஒன்றிணைக்கும் பாலமாகி ஆக்கிரமிப்புச் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கெதிரான தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க வழி செய்யும்.

— காந்தன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை சாத்தியம்!

– கந்தவனம் குமாரசாமி –

முன்னர் ஒருகாலத்தில் வீர வரலாறு படைத்த இனம் ஒன்று பின்னர் அடிமைப்படலாம். தம்மை மறந்த இனத்தவர் எவருக்கும் இது ஏற்படுவது உண்டு. ஆனால், அடிமைப்பட்ட அந்த இனம் அழிந்து விட்டதாக எண்ணலாகாது. சிறைப்பட்ட அந்த இனத்தின் வீரமும், மேன்மையும் அழிந்து விட்டன என்று எண்ணுவது தவறாகும். சிறைப் பட்ட அந்த இனத்தின் வீரமும், மேன்மையும் உள்ளத்தின் ஆழத்தில் உறங்குகின்றனவே தவிர ஓய்ந்துவிடவில்லை. மாறாக ஒடுங்கிய உள்ளக் கிடக்கைகள் ஓயாது அரித்துக் கொண்டே – இடித்துக்கொண்டே – எகிறிக் கொண்டே இருக்கும், விடுதலைக்காக! ஈழத்தமிழரின் வா ழ்விலும் இது இன்று நடந்துகொண்டேயிருக்கிறது.

மேற்சொன்ன அரிப்பை, இடியை, எகிறலை கவனியாத இனம் நாளடைவில் குடிக்கும், கூத்திக்கும் பொய்க் கேளிக்கைகளுக்கும் தன்னை இழந்து கொண்டே யிருக்கும். அமெரிக்கர்களை எதிர்த்த செவ்விந்தியர்கள் தோல்வி மனப்பான்மைக்கு ஆட்பட்டபோது அவர் கள் தம் வீரத்தை மறந்து போதைகளுக்கு இரையானார்கள். தமிழி னம் ஒரு கட்டுக்கோப்புக்குள் வளர்ந்த இனம். பேயுடன் உறவு கொள்வதானாலும் தமிழர்களுக்கு ஒரு தனி இயல்பு உண்டு! இது தான் தமிழர்களை மற்றவர்கள் விரும்புவதற்குரிய காரணம் எனலா ம். "தமிழன் என்றோர் இனம் உண்டு; தனியே அவர்க்கொரு குணம் உண்டு!" எனப்பட்டதும் இதனால்தான்! இத்தகைய கட்டுக்கோப்பா ன இனம் குடிகளில், போதைகளில் ஓரளவிற்குத் தன்னை இழந்து கொண்டிருந்தாலும், உள்ளே குமுறி குமிழியிடும் வீரம், தன்மானம், விருதுகள் அவர்களைச் சதா இடித்துக் கசக்கிக்கொண்டேயுள்ளன. விடுதலைக்காக! இத்துறையில் உலகளாவிய முறையில் எடுத்தால் மூத் தகுடிகளாகிய மற்றைய தமிழர்களை விஞ்சி நிற்பவர்கள் ஈழத்தமிழ ர்களே! இதன் பலனாக கண்ணீர், வேதனை, விம்மல், இரத்தம், வியர்வை –களை நாம் காணிக்கைகளாக விடுதலைத் தேவிக்கு அர் ப்பணித்துக் கொண்டேயிருக்கிறோம். பெற்றவர் முன்னே மகள் கற்ப ழிக்கப்படுகின்றாள்; ஊட்டிய முலையிலிருந்து குழந்தை உருவப்பட்டு நெருப்பில் எறியப்படுகிறது; கட்டிளம் காளையர் அரச பயங்கரத் தால் தூக்குநூறாக்கப்படுகிறார்கள்; தாலிக் கொடிக்கு ஆசைப்பட்ட வர்கள் தம் மனைவியை தாரையாக்கிக் கொடுக்கிறார்கள்; நோ யாளிகள் இரக்கமில்லாமல் தாக்கப்படுகிறார்கள்; வயதானவர்கள் கூட குண்டர்களின் கோரப் பசிக்கு இரைதான்; தமிழர்களின் சொ த்து பகைவனின் விருந்து; தமிழனின் தாகங்கள் வேண்டாதார் நடை பாதை. இவைகளின் மத்தியில் தந்தையிட்ட ஆணை தணியாது நடை பெறுகிறது. தன்மானமுள்ளவன் சரணடையான்; எதிர்த்தே நிற்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுபிரானின் சாபத்தாலோ தம் தவறான செயல்களாலோ யூதர்கள் தம் வீரத்தையும் வரலாற்றையும் களத்தே போட்டு, உலக நாடோடிகளாக இருக்க ஓர் கையள்வு பூமியின்றி அலைந்தார்கள். இரண்டாம் உலகப் போர் அவர்களைப் பந்தாடியது. இட்லரின் கொடிய வெறுப்புக்கு ஆளாகிய அவர்களை அவன் பச்சையாக உண்டான். உலகத்தின் கண்கள் சற்று இறுக்கமானவை என்றாலும், யூதர்களின் வதையைக் கண்டிருக்க வேண்டும். நெஞ்சுருகி யூதர்களின் நாடொன்று என்று இழந்த இசரயேலை கட்டியெழுப்ப முயன்றது. அதில் வெற்றியும் கண்டது. கந்தையுடன் விம்மலும் கூட, கன்னியுடன் செந்நீர் வியர்வையும் கூட, ஒருகையில் துப்பாக்கியுடன் மறுகையில் மண்வெட்டியுடன் பாலைவனத்தைப் பசும் நிலமாய் மாற்றியமைத்தார்கள். எங்கெல்லாம் அவர்கள் அலைந்தாலும் அவர்களுக்கேயுரிய மதிநுட்பம், வீரத்தை அவர்கள் கைவிடவில்லை. உள்ளிருந்து அரித்துக் கொண்டிருந்த அவை பாலையில் உறக்கம் தெளிந்தன, உறக்கம் தெளிவித்தன. இவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர் தமிழர்! ஈழத்தில் யூதர்கள் செய்த அதே காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும்தான் எம் நிலை உலகுக்கு விளங்கவில்லை. யூதர்கள் முன்னே சென்று விட்டனர்; ஈழத்தமிழர் பின்னே சென்றுகொண்டிருக்கின்றனர். எம்வழி எவ்வளவு தூரம் கொண்டது அறியோம். உழைப்பே துணை; உறுதியே வழிகாட்டி; காடுகள் வரலாம்; கழனிகள் வரலாம்; ஆறுகள் வரலாம்; அகழிகள் வரலாம்; கடல்கள் வரலாம்; எரிமலைகளும் வரலாம்; இலக்கை அடையும்வரை போராடிக் கொண்டேயிருப்போம்.

இந்தத் தமிழர்கள் செல்லும் பாதையில் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்போம். புளியமரம் உறுதியானதுதான்; ஆனால், தவிர்க்கமுடியாமல் அதில் போறைகளும் உண்டு. மக்கள் அதை தூணுக்கோ அன்றி உத்திரத்திற்கோ எடுப்பதில்லை, உளுப்பதால்! இப்படியிருந்தும் பணத்தால், செல்வாக்கால் முந்திவிட்ட சில ஈனத்தலைவர்கள் தமிழினத்தின் தலைவிதியை ஆரம்ப விடுதலைக் கட்டத்தில் தாறுமாறாக, சின்னபின்னமாக நிர்ணயித்து விட்டார்கள். இந்த சாபக்கேட்டால் இன்று தமிழர்களின் போராட்டம் பின்தள்ளிக்கொண்டே போகிறது. தலைவர் என்று சொல்பவர்கள் தாம் அனுபவித்த சுகபோகங்களைத் தவிர எதையும் ருசிக்கவில்லை. தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். இத்தகையவரின் வாரிசுகள் இன்றும் 'செல்வா'வின் நிழலில் நின்று வயிறு வளர்ப்பதைக் காண்கின்றோம். இருந்தும் 'செல்வா' காட்டிய வழி ஏற்கனவே தமிழர்களுக்கு விளக்காக இருக்கும்வரை இத்தகைய பெருச்சாளிகளால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. 'செல்வா' தமிழர்களின் விடுதலை கோரி ஒரு மக்களியக்கமாக்கி விட்டுச் சென்று விட்டார். இதுவே அவர்கண்ட மாபெரும் வெற்றி!

(வளரும்)

* தமிழ்முரசின் கட்டுரைப்போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

∴ ஐ.தே.க. முன்னாள் அமைப்பாளர் சுட்டும் குண்டுவீசியும்கொலை

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைப்பாளரும்வடபகுதியில் உள்ள அதன் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவருமான புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த தம்பா பிள்ளை 15.11.82 காலை இனம் தெரியாத வாலிபர் குழு ஒன்றினால் சுழல் துப்பாக்கியால் சுட்டும் பெட்ரோல் குண்டு வீசியும் பயங்கரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக சிறீலங்கா ஆயுதப்படையினர் பலத்த தேடுதல் வேட்டை நடத்தியபோதும் இதுவரை எவரும் சிறை செய்யப்படவில்லை. ஐ.தே.க.வின் தமிழ் அமைப்பாளர்களிடையே இச்சம்பவம் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

∴ சனநாயகத்தை முற்றாகவே குழி தோண்டிப் புதைப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு டிசம்பர் 22 இல்!

சிறீலங்கா பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் 6 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வகைசெய்யும் முகமாக நடைபெறவிருக்கும் சர்வசனவாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 22ஆம் தேதி புதன்கிழமை நடைபெறவிருப்பதாக சிறீலங்கா சனாதிபதி விசேட வர்த்தமானிமூலம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார். சனநாயகத்தை முற்றாகவே குழிதோண்டிப் புதைப்பதற்கான இம்முயற்சியை எல்லா எதிர்க்கட்சிகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

∴ கூட்டணி எம்.பி.க்கள் பதவிவிலகல் கடிதங்களை அமிரிடம் கையளித்தனர்

சிறீலங்கா பாராளுமன்றத்தின் ஆயுளை நீட்டிப்பதற்கு வகைசெய்யும் முகமாக நடைபெறவிருக்கும் சர்வசனவாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறுமிடத்து தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை துறந்துவிடுவதென தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது. இதற்கமைய கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் தமது பதவி விலகல் கடிதங்களை கூட்டணியின் செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளனர். இச்சர்வசனவாக்கெடுப்பிற்கு எதிராக கூட்டணி பிரச்சாரம் செய்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றும் தமிழ்மக்கள் இவ்வர்க்கெடுப்பில் அரசின் கோரிக்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

∴ சர்வசன வாக்கெடுப்பிற்கு பலத்த எதிர்ப்பு !

சிறீலங்கா பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. சிறீலங்காவின் சகல எதிர்க்கட்சிகளும் இதனைக் கண்டித்து எதிர்ப்பிரச்சாரங்களில் இறங்கியுள்ளன. இலங்கையின் மனித உரிமைச்சங்கமும் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளது. 25க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களும் அரசின் இச்செயலைக் கண்டித்துள்ளன. அதேவேளையில் ஐ.தே.க.வின் சகல எம்.பி.க்களும் திகதியிடப்படாத தங்கள் பதவி விலகல் கடிதங்களை செயவர்தனவிடம் கையளித்துள்ளனர்,.

∴ தேசிய ரீதியில் விடுதலைப் புரட்சி

தேசிய ரீதியில் விடுதலைப் புரட்சியை நடத்தி தமிழீழ இலட்சியத்தை வெல்ல முடியும் என ஈழத் தீவிரவாத இயக்கங்கள் தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான முடிவுகளை பிரதான தீவிரவாத இயக்கங்கள் எடுத்துள்ளதாகவும் "வீரகேசரி" செய்தி வெளியிட்டுள்ளது,

∴ கிருட்டிண ஆற்றுநீர் சென்னைவரை ஒப்பந்தம்

ஆந்திர மாநிலத்துடன் தமிழகம் அண்மையில் ஓர் ஒப்பந்தத்தில் கை எழுத்திட்டுள்ளது. அதன்படி ஆந்திராவிலுள்ள கிருட்டிண ஆற்றுநீரில் 15 கனஅடி நீரை ஆந்திரா தமிழகத்திற்குத் தரும். கிருட்டிண ஆறு ஆந்திரா, கருநாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்குப் பயனுகின்றது. இனி சென்னை நகர மக்களும் இதனால் பயன்பெறுவர்.

∴ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியத் தலைவர்கள்மீது விசாரணை

ஆளும் ஐ.தே.க. அரசு தமது எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரை பழி வாங்குதல் நடவடிக்கைகள்மூலம் வேரறுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இரு முன்னாள் அமைச்சர்க்ள் உட்பட 13 சுதந்திரக்கட்சி முக்கிய பிரமுகர்கள் கடும் விசாரணைகளுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அதே வேளையில் சுதந்திரக்கட்சியின் சனதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஆகிய எக்டர் கோப்பேகடுவாவினதும், கட்சியின் முக்கியப் பிரமுகராகிய நடிகர் விசயகுமாரதுங்கவினதும் கடவுச் சீட்டுகள் பறிக்கப்பட்டு அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

∴ பிரான்சு சனதிபதி தமிழகம் வருகை

இந்தியா வந்துள்ள பிரான்சு சனதிபதி மித்திரான் மதுரை, மகாபலிபுரம்ஆகிய இடங்களைச் சுற்றிப்பார்க்கும்பொருட்டு வருகை புரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ 'அத்த' பத்திரிக்கைக்கும் சீல்வைப்பு!

தமிழீழ விடுதலைக் குரலான 'சுதந்திரனு'க்குத் தடைவிதித்து சீல் வைத்த சிறீலங்கா அரசாங்கம் இப்போது இலங்கைக் கம்யூனிசுட்டுக் கட்சியின் சிங்களப் பத்திரிக்கையான 'எத்த' வுக்கும் தடைவிதித்து சீல் வைத்துள்ளது. சனநாயக சுதந்திரம்பற்றி வாய்கிழியப் பேசும் அதி உத்தமர் செயவர்தனு இன்னும் எத்தனைப் பத்திரிக்கைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப்படுகிறதோ தெரியாது ... ?

∴ வைகுந்தவாசன் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார்

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகிய திரு.கிருட்டிணு வைகுந்தவாசன் இந்திய அரசின் உத்தரவொன்றையடுத்து சென்னைப் போலீசாரால் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் தலைவராகிய திரு.நெடுமாறனின் விருந்தாளியாகத் தங்கியிருந்த இவரை போலீசார் விமானமேற்றியபோது தன்னிடமிருந்த சிறீலங்காக் கடவுச்சீட்டை கிழித்தெறிந்து தாம் சிறீலங்காவைச் சேர்ந்தவரல்லர் என்று முழக்கமிட்டார்; கூடியிருந்தோர் திகைத்தனர்.

∴ எம்.சி.ஆர். — கருணுநிதி சந்திப்பு!

தமிழக முதல்வர் எம்.சி. ஆரும் தி.மு.க. தலைவர் கருணுநிதியும் அண்மையில் குமரி அனந்தனின் மகள் திருமணத்தில் சந்தித்துக் கொண்டனர். வெகு நேரம் அன்பாக உரையாடிக் கொண்டிருந்தனர். பின்னர் பேசிய எம்.சி.ஆர். "மாநில அரசியலில் பெரும் மாறுதல்கள் ஏற்படப் போவதாகவும் அவசியமேற்பட்டால் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. இரண்டும் தோளுடன் தோள் சேர்ந்து இரட்டைக்குழல் துப்பாக்கிபோலச் செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

---

யாழ். நூலக மீளமைப்பு நிதி
**********************

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய மீளமைப்புப் பணிக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் தமக்கு அறிவித்து யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் தொடங்கப்பட்டுள்ள "யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதி" 2893 ஆம் எண் கணக்குக்கு தங்கள் உதவுதொகைகளை அனுப்பிவைக்குமாறு யாழ். மாநகர முதல்வர் இராசா விசுவநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழர் வரலாற்றுக் கருவூலத்தை மீள்விப்பதில் அனைவரும் பங்கு ஏற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ சாவகச்சேரி காவல்நிலையத்தாக்குதல் தொடர்பாக இதுவரை 120 பேர் காவலரால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்

சாவகச்சேரி காவல் நிலையத் தாக்குதல் தொடர்பாக இதுவரை 120க்கும் மேற்பட்டவர்கள் காவலரின் கடுமையான விசாரணைக்கு ஆட்பட்டிருக்கின்றனர். சாவகச்சேரி காவல் நிலையம் இனம் தெரியா இளைஞர் குழு ஒன்றினால் துணிகரமாகத் தாக்கப்பட்டு அங்கிருந்த 33 துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டதும் இச்சம்பவத்தில் 3 காவலர் உயிரிழந்ததும் தெரிந்ததே! யாழ் குடாநாடு முழுவதும் பெரும் தேடுதல் வேட்டை நடத்தி வரும் ஆயுதப் படையினரால் இதுவரை எந்த முக்கியத் தகவலையும் பெற முடியவில்லை. எலிகாப்டர் மூலம் துண்டறிக்கைகளை விநியோகித்து வரும் காவலர்கள் இது தொடர்பாகத் தகவல்களைத் தருவோர்க்கு 2½ இலட்சம் உருபா சன்மானம் தரப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

∴ மதகுருக்கள் சிறைப்பிடிக்கப்பட்டது தொடர்பாக யாழ். மாநகரசபையில் கண்டனத் தீர்மானம்

"யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வணக்கத்திற்குரிய பிதாக்கள் வதியும் தனிப்பட்ட இருப்பிடமான அமலோற்பக்கில் பாரபட்சமான முறையில் இராணுவத்தினரும் போலீசாரும் புகுந்து விசாரணைக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வணக்கத்திற்குரிய பிதாக்கள் சிலரை அழைத்துச் சென்று இராணுவ முகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்வதைக் கண்டிக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை மேற்படி நடவடிக்கைமூலம் சம்பந்தப்பட்ட வணக்கத்திற்குரிய மதகுருமாரின் பாதுகாப்புக்குறித்து பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தையும் அமைதியின்மையையும் ஓரளவாவது தணிக்கும் நோக்குடன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய பிதாக்களை அதிவணக்கத்திற்குரிய ஆயர்கள் சென்று சந்திப்பதற்கும் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சனாதிபதி எடுக்க வேண்டும் என்று கரிசனையுடன் கேட்டுக் கொள்கிறது" இத் தீர்மானம் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. ஆ. துரைராசசிங்கம் அவர்களால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.

இதே வேளையில் 2,000க்கும் மேற்பட்ட யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் மதகுருக்களைச் சிறை செய்ததைக் கண்டித்து பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். பல்வேறு இயக்கங்களும் அரசின் இச்செயலை வன்மையாகக் கண்டித்து வருகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ அரபாத் எங்கே ....?

யாழ். குருநகர் இராணுவ முகாமிலிருந்து தப்பியோடிய அரபாத் மீண்டும் இராணுவத்தினரால் யாழ். புகையிரதநிலையத்தில் சிறைசெய்யப்பட்டது தெரிந்ததே! தற்போது இவரது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுமீது தீர்ப்பு வழங்கிய மேன்முறையீட்டு உயர்அறமன்றம் இவரை நீதிமன்றத்திற்குக் கொண்டுவருமாறு உத்தரவிட்டுள்ளது. அதே வேளையில் ஆரம்பத்தில் இவர் தப்பிச் சென்றபோது இவருக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் பலரும் விசாரணைக்குள்ளாகியுள்ளனர்.

∴ கோட்டையிலும் கொடி பறக்கிறது!

யாழ்ப்பாண நகரில் ஆயிரக் கணக்கான ஆயுதப்படையினர் குவிக்கப்பட்டு, மூலைக்கு மூலை இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட போதும் அண்மைக் காலத்தில் தமிழீழ விடுதலைத் தீவிரவாத இயக்கங்களின் துண்டறிக்கைகள் நகரில் இளைஞர்களால் தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதே வேளையில் யாழ் காவல் நிலையத்தில் உள்ள அலுவலக விளம்பரப் பலகையிலும் தமிழீழத் தீவிரவாத இயக்கத்தின் அச்சறிக்கை ஒட்டப்பட்டிருந்ததாம்! இது காவல்துறைக்குக் கிலியையும் கலக்கத்தையும், உயர் அதிகாரிகளுக்குத் தலையிடியையும் கொடுத்துள்ளது. காவல்துறையிலும் புலிகள் ஊடுருவி விட்டார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

∴ அந்தமானுடன் புதிய விமானத் தொடர்பு

சென்னைக்கும் அந்தமான்–நிக்கோபார் (நக்கவாரத் தீவுகள்) தீவுகளுக்குமிடையே இதுவரை விமானத் தொடர்பேயில்லாமல் இருந்து வந்த குறை இப்போது நீங்கியுள்ளது. புதிதாக 737 விமானம் போர்ட் பிளேருக்கு (அந்தமானின் தலைநகருக்கு) தனது போக்குவரத்தை அண்மையில் தொடங்கியுள்ளது.

∴ சிறீலங்காவில் மோட்டார் செய்ய சென்னை கம்பெனியுடன் ஒப்பந்தம்

சிறீலங்கா அரசு சிறீலங்காவில் மோட்டார் வண்டி செய்வதற்காக சென்னையிலுள்ள அசோக்கு இலேலண்டு மோட்டார் குழுமத்துடன் ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.

∴ தமிழ்நாட்டுக்கு மிகக் குறைந்த மத்தியஅரசு உதவி!

இந்தியாவில் மற்ற எல்லா மாநிலங்களையும் விட மத்தியஅரசு வரிப்பணப் பங்கிடுவதில் தமிழ்நாட்டுக்கு ஆகக்குறைந்த உதவியேதருகின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ மட்டுநகர் இளைஞர்களும் சிறை

தமிழீழ விடுதலை அணியைச்சேர்ந்த யோகன் கண்ணமுத்துவும், தமிழீழ விடுதலைக் கழகத்தின் செயலாளரான இரா. வாசுதேவாவும் காவலர்களால் சிறைப் பிடிக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பிணை வழங்குவதையும் காவலர்கள் மறுக்கின்றனர். இதே வேளையில் இவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டது தொடர்பாக மட்டுநகரின் உயர் காவல் அதிகாரிகளுக்கு தமிழீழத் தீவிரவாத இயக்கம் ஒன்றினால் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

∴ ஈழவேந்தன் இல்லத்தில் காவலர்கள் சோதனை

தமிழீழ விடுதலை அணியின் இணைச் செயலாளரான ஈழவேந்தனின் இல்லம் காவலர்களால் பலதடவைகள் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. இவரது வீட்டிலிருந்த தமிழீழம் தொடர்பான பலநூல்களும், பிரசுரங்களும் காவலர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. ஈழவேந்தனின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாகவும் நீண்டநேரம் கேள்விகள் கேட்கப்பட்டன.

∴ சிறீலங்காவின் வரவு-செலவுத் திட்டம் கொண்டுவருவதில் தாமதம்

திட்டமிட்டபடி சிறீலங்காவின் வரவு-செலவுத் திட்டத்தைக் குறிப்பிட்ட திகதியில் கொண்டுவருவதில் நிதியமைச்சருக்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் 'வங்குரோத்து' அடைந்துள்ள பொருளாதார நிலைமையும் கடன்கொடுப்பதற்கு வெளிநாடுகள் கைவிரித்துவிட்ட காரணமும் இத்தாமதத்தைத் தோற்றுவித்துள்ளன. அதேவேளையில் சிறீலங்காவில் விரைவில் நாணயப் பெறுமதிக் குறைப்பும் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

∴ தமிழகத் தொலைக்காட்சிகளில் திணிக்கப்பட்ட இந்தி விரட்டப்பட்டது

தமிழ் மக்களின் கட்சி வேறுபாடற்ற கடும் எதிர்ப்புக்குள்ளானதும் இந்தியைத் தென்னாட்டில் திணிக்கும் வகையில் அன்றாடம் 1 மணியளவு ஒளிபரப்பப்பட்டு வந்ததுமான இந்திச் செய்தியை - வெள்ளோட்டம் விட்டுப்பார்த்து மக்கள் சினத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்டதாலும், பெரியகுளம் தந்த பேரடியால் தெளிந்துள்ளதாலும், இந்திராகாந்தி தற்போது தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி நிறுத்தப்படுவதாக அறிவித்துள்ளார்.

∴ மாநிலங்கள் தொழில் அமைப்புகுறித்து தமிழ்நாடு எதிர்ப்பு!

மத்தியஅரசு தற்போது கடைப்பிடித்துவரும் மாநிலங்களுக்கான தொழில் அமைப்புக் கொள்கையை தமிழ் நாடு அரசு கண்டித்து உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேரோடு சாயுமுன்னே ...!
**********************

வீம்போடு வீக்கிஙங்கள் விதமாய் வியம்ப வேண்டாம்
வீணன இவையெல்லாம் அழிவின்றி வேறேதோ
வேகும் எம் ஈழத்து வேங்கைகள் யாவும்
வேரோடு சாயுமுன்னே வேவிடுவீர் வேட்கையுடன் அவரிடமே

போராடத் துணிந்திட்டு போர்க்களமேகவில் லையெனில்
போலியாகும் நம் மானத்து தமிழன்றோ
போராடியே தீரமேற்றிய உளத்தோடு செங்கோலோச்சர்
போகமாய் செய்தனர் போரேயென அறிவீர் -கள்

வேண்டி நிற்குதே என் நெஞ்சு வேகவைக்க
தோண்டி எடுத்திடவே நாம் தேடவேண்டும்
சீண்டியவர் எமை சீரழிக்கையிலே
தாண்டி நிற்கலாமோ நாம் தனிநாட்டுப் பாதைவிட்டு

பாண்டியொடு பல்லாங்குழி விளையாடும் நம் சிறுசுகள்
பாய்ந்து பயந்து பதுங்குகிறார் எம் பலவீனத்தால்
மாண்டு இவர் மனம் கருகிப் போகுமுன்னே
மாற்றம் கண்டிடுவோம் மானமாய் இவர்வாழ

தீரமேறி வீரம் செய்ய நம் விளைதோள்கள்
பாரமேறிப் பலவீனமாய் சோர்ந்து போவதா
காரசாரமாய் கத்தியவர் எமை கலக்குகிறார்
வீரதீரமாய்விளைத்திடுவோம் வீணர் இவர் சிரசையே.

"விலங்குடைத்து வீசட்டும் வீர்த்தமிழ்"

*பாபு அருமருகன்*

*****************************************************

## ∴ பிந்திய செய்திகள் ∴

காரைநகர் கடற்படைத் தளத்தைத் தாக்குவதற்காக ஒரு சிறியவான் ஒன்றில் சென்ற இளைஞர்கள் மீது அங்கு நின்ற கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் வானில்வந்த இளைஞர்கள் ஒடிக்கப்பியுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. வடபகுதி முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு தேடுதல் நடைபெறுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் நித்தியானந்தனும் அவரது மனைவியாரும் சிறைசெய்யப்பட்டு குருநகர் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி பொலிசு நிலையத்தாக்குதலில் காயமுற்ற இளைஞர்கள் இவரின் வீட்டிலிருந்து சிகிச்சை பெற்றார்கள் என்ற சந்தேகத்தின்மீதே இருவரும் சிறைசெய்யப்பட்டார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.
*****************************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தமிழ் மக்களுக்கு
# தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்சு)
# யின் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

************************************************

" நீத்தார் பெருமை நினைவில் கொணர்கின்ற
'நத்தார்' வருக! நலந்தருக ஏசுபிரான்!
நீத்தோம் எம்நிலம்; நிறைந்த விடுதலை!
தீத்தான் பகைஆட்சி! தீர்ப்பா குருக்களுக்கு?
நீ தான் துணை! நேயனே காக்கஎமை! "

*************************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன விடுதலை

## 5. விடுதலைப்பயிருக்கு எரு மொழியின் முன்னேற்றம்

∴ காமன் ∴

மொழி தெரியாததால் வழி தெரியாது போயிற்று தமிழர்க்கு! ஆம்; தமிழனின் வரலாறு வந்த வழி தெரியவில்லை ; இனி வாழும் வகை கூறும் வழி அறியவும் முடியவில்லை. திருஇலங்கையை எளிதாக சிறீலங்கா ஆக்க முடிகிறது ஆரியச் சிங்களவரால்! இலங்கை என்னும் பெயர் தமிழில் ஏன் வந்தது என்று அறிந்திருந்தால் அல்லவா அதனை எதிர்த்து நாம் போராடுவதற்கு? சிறீலங்கா என்றால் இலங்கைதானே என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டு அவனை எதிர்த்துப் போராடத் தவறி விட்டோம். இனி அவன் யாழ்ப்பாணத்தை "நாய்ப்பான" என்று சிங்களமாக்கினால் என்ன செய்யப்போகிறோம் நாம்? யாழைக் கொடியிலே வைத்து – பரமசிவனையே மடக்கிய – இராவணன் என்னும் தமிழன் ஆண்ட மண்ணில் யாழையும் அது வந்த வரலாற்றையும் இன்னும் கொட்டி முழக்கிக் கொண்டிருப்பதன்றோ யாழ்ப்பாணம் என்னும் திருப்பெயர்!

இந்தியாவில் திருநெல்வேலியில் உள்ளது திருவிலங்கை என்னும் சிற்றூர். இந்தத் திருவிலங்கையும் அந்த "சிறீலங்கா"வும் ஒன்றாகி விடுமா? திரு என்றால் அழகு, தூய்மை, செல்வம் என்னும் முப்பொருளை உள்ளடக்கிக் கூறுவதாகும். "சிறீ" என்னும் ஆரியச் சொல் அழகை மட்டுமே குறிப்பதாகும். இதனால் திருவிலங்கையின் திரு (செல்வம், தூய்மை) அழிந்துவிட்டதாகத்தானே பொருள்படும்! மொழியறியாதார் வழியறியாதாரே! திருவிலங்கையின் பெயரை மறந்துவிடாதிருக்க திருநெல்வேலித் திருவிலங்கையாவது இன்னும் மாறாமல் உள்ளதே!

வரலாற்றை இதுவரை எழுதிய மேல்நாட்டு அறிஞர்கள் இந்தியத் துணைக் கண்ட வரலாற்றை எழுதும்போது, வட இந்தியாவிலிருந்து தொடங்கி எழுதிவருகின்றனர். இதனை எச்சு.சீ. வேல்சு என்னும் அறிஞர் வன்மையாகக் கண்டித்ததுடன், இந்திய வரலாற்றைத் தொடங்குவதற்கு, இந்தியப் பழங்குடிகளாகிய தமிழர்வாழும் திரு இலங்கையிலிருந்துதான் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வரலாற்றில் அரப்பா, மொகன்சதரோ நாகரிகம் கி.மு. 5,000 ஆண்டுகள்வரை இருந்த மிகச்சிறந்த பண்பாட்டு அடையாளம் என்று ஆராய்ச்சியாளர்களால் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாகரிகம் இருந்த இடம் சிந்து ஆற்றங்கரை. அதாவது மேல் கீழாக பாக்கித்தானம், இந்தியா, வங்காள தேசம் ஆகிய மூன்று நாடுகளிலும் ஊடறுத்துச் செல்லும் அளவுள்ள இரு பெரும் நாகரிகக் கூறுகளை அறிஞர் அங்கே கண்டுபிடித்துள்ளனர். இதில் அரப்பா என்பது அரப்பன் என்னும் தமிழ்ச் சொல்லாகும். அரன் என்பது சிவன் என்றே பொருள்படும். இன்றும் சிவனைக்குறிக்கும் சொற்களாகக் கூறப்படுபவைகளுள் ஐயப்பன், ஐயாறப்பன், ஆவுடையப்பன் என்பன இத்துடன் ஒப்பு நோக்கி இடப்பட்டவையாகும். 'அரஅர மாதேவ' என்று அழைக்கும் வழக்கையும் கவனிக்க. மற்றது மொகன்சதாரோ என்பது முகன்தசரன் (தசம் – பத்து) என்றதன் திரிபு. அதாவது பத்துமுகன் என்று திருமால் அழைக்கப்பட்டான். காரணம் அவனது பத்து (அவதார)த் தோற்றரவுக் கதைகளால் அவனுக்கு அப்பெயர் வந்திருக்க வேண்டும். அவனது 'இராம' 'அவதார'த்தில் தந்தை பத்துத் தேருக்கு உடையவராக இருந்ததால் அவரை தசரதன் (பத்துத் தேரன்) என்றழைத்ததையும் உற்றுக்கவனிக்க. திரு இலங்கை மன்னன் இராவண்ணன் பத்துத்தலை இராவண்ணன் என்றழைக்கப் பட்டதையும், அவனை எதிர்த்த திருமாலின் தோற்றரவாகிய இராமன் – பத்து முகன் – என்றிருந்தது வியப்புக்குரியதாகாது. சம வலிமை யுடைய இரு மறவேந்தர் அவர்கள் இருவரும் என்பதே இதனால் விளங்கும். இதனால் அன்றிருந்த இந்தியத் துணைக்கண்ட மக்கள் அமைப்பு ஒழுங்கு புலனாகும்.

இருபெரும் நாகரிகங்களும் ஏறத்தாழ சமகால்த்தில் முறையே குறிஞ்சி நிலத் தெய்வமாகிய சிவனை வணங்கிய சைவராலும், முல்லைநிலத் தெய்வமாகிய திருமாலை வணங்கிய மாலியராலும் (வைணவராலும்) உருவாக்கப்பட்டவையே என்பதை மொழியறியாதார் எப்படி அறிந்து காணல் முடியும்! அரப்பாவிலும், முகன்தசரனிலும் கண்டு பிடிக்கப்பட்ட புதைபொருள் கற்கருவிகளுள் சூலாயுதம், இலங்கம் (இலிங்கம்), காளி, சிவன், சங்கு, சக்கரம், கண்ணன் முதலான உருவங்களும்இருந்தன. இஃது அருந்தமிழ் மொழியறிவால் அரப்பா, முக்ன்தசரன் என்னும் பெயர்களைக் கண்ட அளவில் கண்டு கூறப்பட்ட உண்மைகளே என்பதை விளக்கும் சான்றுகளாக அமைந்துள்ளது.

இனி, வட இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்நாகரிகங்கள் எவ்வாறு தமிழருடையன என்றும் சிலர் வினு எழுப்பலாம்.

இதற்கும் விடை கூறுவது தமிழ் மொழியே! தமிழின் கிளைமொழிகள் மொத்தம் 18.என்று கால்டுவேல் கண்காணியாரும், கிரையர்சன் என்னும் இந்திய வரலாற்றை ஆராய்ந்த அறிஞரும் கூறுகின்றனர். அக்கிளை மொழிகளுக்குள் இராசுமகால், சந்தாலி, கோண்டு, கோட்டா போன்ற மொழிகள் இன்றும் பாக்கித்தானத்திலும், பஞ்சாப்புப் பகுதிகளிலும், வங்காளத்திலும் பழக்கத்தில் உள்ளன என்று அவ்வறிஞர்கள் கருத்தறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டைக் கடல்கொள்ளத் தொடங்கிய காலத்தில் வடஇந்தியாவில் இருந்த தமிழரால் சைவமும், மாலியமுமான (வைணவ) இரு பெரும் நாகரிகங்கள் நிலைநாட்டப்பட்டதன் விளைவாகவே அரன் வணக்கத்தால் அரப்பனும், பத்து 'அவதார'த் திருமாலைக் கொண்டு முகன்தசரனும் விளங்கின என்பதை அறியலாம்!

வழியறியாதவர்க்கு வழிகாட்டி போல வரலாறு வந்த வழியறியாதவர்க்குத் தமிழ் மொழி உதவுவதை இதனால் தெற்றென அறியலாம். இவ்வளவு அருமையான தமிழை தமிழராகப் பிறந்த நம்மவரும் சரிவர உணராமல் – உணர்ந்தும் சரிவரப் பயன்படுத்தாமல் – அப்படிப் பயன்படுத்துவோரையும் பகடிசெய்துவருவது எவ்வளவு கழிவு இரக்கத்திற்குரிய செய்தியாகும்!

இலங்கைக்கு விடுதலை கேட்டுப் போராடிட வேண்டிய நாம் அதன் வடபகுதி ஈழத்திற்கு மட்டுமே இன்று விடுதலை கேட்டுவருகின்றோம். எங்கிருந்தோ வந்து புகுந்த சிங்களவர் இவ்வளவு பெரிய தமிழ் நாட்டை அருகில் வைத்துக் கொண்டிருந்தும்கூட, ஆரிய அரசுகளின் மறைமுக ஒற்றுமையால் (இந்திய சிங்கள ஆரிய அரசுகள்) நம்மைக் குறுகிய ஈழப்பகுதிக்குள் தள்ளியதுமல்லாமல், துணிந்து நம்மையே வந்தேறிகள் என்று வாய்க்கொழுப்புடன் கூறியும் வருகின்றனர். இதற்குக் காரணம் நாம் நம் தாய்த்தமிழின் அருமையை உணராமல் வாழ்வதும், ஆரியச் சொற்களையும், ஆரிய மொழித்திரிபாகிய சமற்கிருத எழுத்துக்களையும் கூசாமல் பயன்படுத்துவதும்தாம்!

சமற்கிருதம் வேறு; சிங்களம் வேறு என்பர் சிலர். இரண்டின் வேரும் இரு இனமக்களின் அடிப்படைக்கருத்தும் தமிழனை, தமிழை ஆழக் குழிதோண்டிப் புதைத்து ஒழிக்கவேண்டும் என்பதுந்தாம்! விடுதலை என்னும் பயிருக்கு எருப் போல்வது தமிழ்மொழியின் முன்னேற்றம் என்பார் பெருஞ்சித்திரனார். தமிழனின் மொழியில் கலப்பை ஏற்படுத்துவது தாய்ப்பாலில் கலப்பு ஏற்படுத்துவதற்குச் சமமாகும். சிங்கள மொழிக்குத் தமிழே தாய் என்பதை அவன் ஒப்புவதில்லை. ஆனால், தமிழில் ஆரியச் சமற்கிருதச் சொற்களைக் கலப்பதற்குமட்டும் நம்மவர் கவலைப்படுவதுமில்லை!

இன்னபடி இருந்தால் என்னபடி நாம் விடுதலையை அடையப் போகின்றோம்? தமிழ்மொழியே தமிழனுக்குக் கைவாள்! கருத்துக் கண்! வரலாற்று வழிகாட்டி என்றெல்லாம் அறிஞர் பெருமக்கள் கூறுவது நம் கருத்துக்குருடர்களாகிய தமிழருள் சிலருக்கு விளங்கவில்லை போலும். அன்னவர் இனியாவது திருந்தி தமிழை உயிர் எனப் பேணிக் காப்பார்களாக! அப்போதுதான் விடுதலைப்பயிர் செழித்து வளர்ந்து பகை நெருஞ்சிக் காளான்களை அழித்து ஒழிக்கும். சிங்களக் குக்கல்களின் குரைப்புக்கு ஆப்பு வைத்தாற்போல் ஆகும்.

(வளரும்)

---

"மொழிப் போர்புரி! செழிப்பாம் தமிழ் மொழிப்பால் குடிப்பாய்!
பழிப்பார் உனை! அழிப்பார் பினை! விழிப்பாய் தமிழா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறிகெட்டுப் போகிறது தார்மீகம்.........!
தமிழ் இளைஞர்களைக் கொடுமைப்படுத்திய போதாதென்றுகத்தோலிக்கமதகுருக்கள் மீதும் சிங்கள ஆயுதப்படை பாய்ச்சல்!

மாதக்கணக்காக.....,வருடக்கணக்காக........எக்காரணமும் இன்றி பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டி,சிறையில் அடைத்து சித்திரவதை புரிந்துவரும் சிங்கள ஆக்கிரமிப்பு அரசுஇப்போது உலகமக்களால் புனிதமானவர்களாய்....,உயர்ந்தவர்களாய் போற்றப்படும் தமிழ்க் கத்தோலிக்க குருமார்கள் மீது பாய்ந்திருக்கிறது.

கடந்த நவம்பர்(கார்த்திகை)மாதம் 13 ஆம் திகதி இரவு 10 மணியளவில் சிறீலங்கா போலிசும்,இராணுவமும் கூட்டாககத்தோலிக்கக்க மதகுருக்களின் விடுதியின்மீது படையெடுப்பு நடாத்தினர். மறுநாள் அதிகாலை மூன்றுமணிவரை விடுதி முழுவதும் தேடுதல் வேட்டை நடாத்தினர். தேடுதல் முடிவில் வணக்கத்திற்குரியபிதா ஜீவேந்திரபோலும்,வண.பிதா போல்நட்சத்திரமும் ஆயுதப்படையினரால் சிறை செய்யப்பட்டு குருநகர் இராணுவமுகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.அதையடுத்து 14.11.82 காலை வண.பிதா அபர்ணம்.சிங்கராயர் பேருந்து நிலையத்தில் வைத்து சிறைசெய்யப்பட்டு குருநகர் இராணுவமுகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அன்றைய தினம் காலை 10 மணியளவில் தமிழீழ விடுதலையணியின் இணைச்செயலாளர் ஈழவேந்தனின் வீடும் சோதனைசெய்யப்பட்டது ஈழவேந்தனும் சிறைசெய்யப்பட்டு குருநகர் இராணுவமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.விசாரணையின் பின் அன்றுகாலை விடுதலைசெய்யப்பட்ட வண.பிதா.போல்நட்சத்திரம் மீண்டும் நடுப்பகலில் சிறைசெய்யப்பட்டார்.அன்றிரவு 11 மணியளவில் வண.பிதா. இரசிஞேல்ட் இராசநாயகம் சிறைசெய்யப்பட்டார்.

15.11.82 அதிகாலை 3 மணியளவில் வண.பிதா.போல்நட்சத்திரமும்,ஈழவேந்தனும் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று கட்டளையிடப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். பின் காலை 9 மணியளவில் ஈழவேந்தன் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். நடுப்பகலில் ஊர்காவற்துறையில் இருந்து வண.பிதா.சின்னராசாவும்,செட்டிகுளத்திலிருந்து வண.பிதா.சூசைநாயகமும்,வவுனியாவிலிருந்து டொனல்டு கனகரத்தினமும் குருநகர் இராணுவமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அத்துடன் தொலைபேசித் தொடர்புப் பகுதியில் பணிபுரியும் சண்முகநாதக் குருக்கள் உமாகாந்தனும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மதகுருக்களின் விடுதியிலிருந்து தமிழீழ விடுதலை இயக்கங்கள் பிரசுரங்கள், விடுதலைப் போராட்டம் தொடர்பான இசைத்தட்டுக்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் கூறுகின்றன. அதே வேளையில் சில செய்தித்தாள்கள் வங்கிக் கொள்ளை தொடர்பான ஒரு பகுதிப் பணம் கைப்பற்றப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளை வெளியிட்டுள்ளன. அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றின்கீழ் வரம்புமுறைகளைமீறி சிறி லங்கா அரசு நடத்தும் இந்த அக்கிரமம் நாகரிக உலகம் முழுவதன் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளது. இந்தக் கொடுரங்களுக்கெல்லாம் எதிராக ஈழத் தமிழினம் எப்போது பொங்கி எழப் போகின்றதோ?

" என்னதான் நினைத்தனர் இக்கொடுமை இழைத்தனர்!
எத்தர் கைக்கு அதிகாரம் இனிமேலும் சேருமேல்
இழிவான கழுதைக்கும் தமிழன் இளைக்காரமே! "

---

அன்புள்ள வாசகர்களுக்கு!

"தமிழ் முரசு" இதழில் கையாளப்படும் தமிழ்நடை குறித்து வாசகர்களுக்கு ஒரு சிறிது கூற விரும்புகின்றோம். தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலப்பதையும், பிற எழுத்துக்களைக் கலப்பதையும் கூடியவரையில் தவிர்ப்பது தமிழ் இன உணர்ச்சிக்கு எருவாக அமையும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எழுத்தைக் கொல்வதால் மொழியைக் கொல்ல எதிரிக்கு இடம் அளிப்பது போலாகிவிடும். எனவே, தொடக்க நிலையில் தமிழ் முரசில் வேறு எழுத்துக் கலப்பில்லாமல் வெளியிடுகின்றோம்.

இந்த நல்லமுயற்சி வெற்றியடைய உங்களது ஆதரவு கிட்டுமென நம்புகின்றோம்.

ஆசிரியர்

---

செய்தித் திருத்தம்

ஐப்பசி மாத 'எரிமலை' இதழில் வெளியாகிய திரு. அன்ரன் யோசப் நிக்கோலாவின் மரணம் பற்றிய செய்தியை அன்னாரது உடல் பிரான்சு தமிழர் இயக்கத்தின் அனுசரணையுடன் அவரது நெருங்கிய நண்பர்களின் உதவியுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது எனத் திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

---

"தமிழீழ விடுதலைப் போரைத் தட்டிக் கழிப்பதா?
கட்டியே மனைவியின் முகத்தில் விழிப்பதா?
தமக்குள்ள பெருமையைத் தாமே அழிப்பதா?
தமையீன்ற தாயின் குடரைக் கிழிப்பதா?" — புரட்சிப்பாவேந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MOURASSOU

MURASU 1 DECEMBRE 1982 OLY 2

## REFERENDUM : POUR UNE RECONDUCTION DE L'ACTUEL PARLEMENT

Le Président de Sri Lanka a annoncé que le Gouvernement allait faire un référendum pour prolonger l'actuel Parlement pendant six ans ; le Président a annoncé officiellement que ce référendum aurait lieu le 22 Décembre 1982. En attendant, tous les membres du parti au pouvoir (U.N.P.) ont remis au Président leurs lettres de démission non datées.

## DES MEMBRES DU PARLEMENT DU T.U.L.F. DEMISSIONNENT

Des Membres du Parlement appartenant au Front Uni de Libération des Tamouls vont démissionner de leur siège pour protester contre la décision du Gouvernement de reconduire le Parlement. C'est ce qu'a annoncé le Secrétaire Général du Parti et leader de l'opposition au Parlement, Mr. A. AMIRTHALINGAM.

## REFERENDUM : LE NORD ET L'EST PEUVENT-ILS FAUSSER LES CALCULS DU GOUVERNEMENT ?

Des observateurs politiques prévient une participation massive des électeurs du Nord et de l'Est lors du référendum visant à reconduire le Parlement pendant six ans. Ils prédisent qu'une écrasante majorité d'électeurs votera contre ("Non") et opposera un "Non" catégorique à la demande du Gouvernement.

## PRETRES ARRETES ET DETENUS

La Police/Armée Sri Lankaise s'est rendre au domicile de prêtres Catholiques et procédé à une perquisition. Ils ont arrêté le Rév. Père Paul Jeevendra et le Rév. Père Paul Nadchathram. Ceci a eu lieu le 13 Novembre 1982. Le lendemain, 14 Novembre, la Police/Armée a arrêté le Rév. Père Aparnam Singarayar alors qu'il attendait l'autobus pour rentrer chez lui. Ces prêtres ont tous été conduits au Camp Militaire de Gurunagar. Le même jour, dans l'après-midi, un autre prêtre, le Rév. Père Réginald Rajanayagam a été arrêté. Enfin, le 15 Novembre, les Rév. Pères Sinnarasa, Soosanayagam et Donald Kanagarathnam ont été arrêtés et se trouvent eux aussi au Camp Militaire de Gurunagar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Le rapport de la Police/Armée déclare que ces prêtres possédaient chez eux des documents concernant les Mouvements de Libération des Tamouls, ainsi que des disques et des cassettes de chansons et discours relatifs à la lutte pour la liberté, demandant la formation d'un ETAT EELAM séparé pour les Tamouls de Sri Lanka.

L'état d'urgence a été décrété il y a quelques jours. Il n'est donc pas clairement établi que la détention a été effectuée sous le couvert de l'état d'urgence, ou en application de la loi sur la Prévention du Terrorisme (PTA). Dans la première hypothèse, la Police/Armée peut les détenir pendant 14 jours sans avoir à les déférer à la justice. Si, au contraire, il s'agit de l'application de la Prévention du Terrorisme (PTA), la Police/Armée peut les détenir pendant 72 heures. Toutefois, si un ordre de détention a été notifié, ils peuvent être arrêtés de temps en temps sans jugement pendant 18 mois.

Entretemps, le Secrétaire Général du Front de Libération de l'EELAM TAMOUL, Mr. EALAVENTHAN a, lui aussi arrêté, puis relaché après enquête.

## DES TRACTS DE LA POLICE LANCES PAR HELICOPTERE

Des milliers de tracts imprimés ont été lancés par hélicoptère sur la pénincule de Yalpanam (Jaffna) par la Police. Les tracts demandaient à la population de Yalpanam (Jaffna) d'informer la Police de toute tentative par qui que ce soit de disposer des corps de personnes tuées ou des armes volées lors de la récente attaque contre le poste de police de CHAVAKACHERI.

En même temps, la Police de Yalpanam (Jaffna) a annoncé qu'elle offrait une récompense de 2,50,000 Rupies (environ 83,000 Francs Français) à quiconque fournirait des renseignements concernant la récente attaque contre le poste de police de CHAVAKACHERI.

## LE GOUVERNEMENT DE SRI LANKA INTERDIT UN AUTRE JOURNAL

Le Gouvernement de Sri Lanka a apposé les scellés sur le bureau et les locaux du quotidien Shinhala de tendance communiste, le "Eththa" en usant des pouvoirs découlant de l'état d'urgence.

C'est le deuxième journal interdit en 15 jours. Rappelons que le journal politique Tamoul basé à Yalpanam (Jaffna) "THE SUTHANTHIRAN" a été interdit par la Police de Yalpanam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Jaffna) le soir des élections du 20 Octobre, 1982.

UN MEMBRE DU T.E.L.F. DE BATTICALOA EN DETENTION PREVENTIVE

Yogan Kannamuthu, membre du Front de Libération EELAM des Tamouls, de Batticaloa, qui avait été arrêté par la Police sous l'inculpation de tentative d'impression d'un tract anti-gouvernemental, a été placé en détention préventive par le Juge de Batticaloa.

A la même époque, le Secrétaire Général de l'Organisation de la Population EELAM TAMOUL, Vasudeva, a, lui aussi, été arrêté par la Police.

UN ANCIEN ORGANISATEUR DE L'U.N.P. EXECUTE

L'un des anciens organisateurs de la région nord de l'U.N.P. (Parti National Uni), Mr. THAMPAPILLAI, a été assasiné par de jeunes inconnus à Punnalai Kadduwan.

LE C.R.M. DONNE L'ALARME AU SUJET DU PROJET DE REFERENDUM

Le Mouvement des Droits Civils de Sri Lanka a adressé un télégramme urgent au Président JEYAWARDANE pour l'exhorter à abandonner son projet de reconduction du Parlement pour six ans. Le Comité de travail du C.R.M. a déclaré que cette proposition était "MAL VENUE" et qu'elle "MENACAIT LA BASE MEME DU GOUVERNEMENT PARLEMENTAIRE DEMOCRATIQUE". Il ajoute que cette proposition est contraire aux obligations de Sri Lanka aux termes du contrat international des droits civils et qu'elle nie les bénéfices de 50 années de franchise universelle. Le référendum ne remplace pas une élection générale, déclare ce télégramme signé par Mr. Desmond Fernando, Secrétaire du C.R.M.

D'autre part, tous les parties de l'opposition et plus de 25 syndicats condamnent le référendum proposé.

*****************************************************************

LISEZ LES ATTROCITES DE GOUVERNEMENT SRI LANKAISE !!!

*****************************************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "RAPPORT 1982 D'AMNESTY INTERNATIONAL"

## SUR SRI LANKA !!!

AMNESTY INTERNATIONAL s'inquiète du recours continuel à la Loi sur la Prévention du Terrorisme qui suspend d'importantes garanties légales et autorise la détention clandestine dans des lieux non révélés ; des prétextes à arrestations arbitraires et tortures par l'armée et la Police ; de la mort confirmée de plusieurs civils de la province Nord de langue Tamoul durant leur détention par la Police et l'armée ; de l'application de la peine de mort.

Certains détenus non politiques sont également morts des suites de mauvais traitements au cours de leur détention par la Police.

AMNESTY INTERNATIONAL reste préoccupée par la "disparition" confirmée de trois jeunes Tamouls en Juillet 1979.

AIDEZ LES EELAM TAMOULS
DANS LEURS LUTTE
CONTRE
L'AGRESSEURS SINHALESES!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூலம் பிரெஞ்சு

(பாகம் 10 )

கடந்த இதழில் article partitif பற்றிப்பார்த்தோம். இந்த இதழில் adjectif என்றால் என்னவென்று பார்ப்போம்.

Adjectif என்பது ஒரு nom (பெயர்ச்சொல்லை) விவரிப்பதாகும். அதாவது ஒரு பெயரின் குணம், நிறம், அளவு போன்றவற்றைக் குறிப்பதாகும்.

(உ-ம்) A) ADJECTIF QUALIFICATIF

| | |
|---|---|
| 1 ) Une GRANDE Maison | ஒரு பெரும் வீடு |
| 2 ) Une GROSSE Pomme | ஒரு பெரிய ஆப்பிள் |
| 3 ) Une Pomme RONDE | ஓர் உருண்டை ஆப்பிள் |
| 4 ) Une Fleur BLEUE | ஒரு நீலப் பூ. |
| 5 ) Un PETIT Stylo | ஒரு சிறிய பேனா |
| 6 ) Un LONG Crayon | ஒரு நீண்ட பென்சில் |
| 7 ) Un Cahier MINCE | ஒரு மெல்லிய புத்தகம் |
| 8 ) Un Tableau NOIR | ஒரு கரும் பலகை |

குறிப்பு :- Adjectif Qualificatif சில இடங்களில் பெயர்ச் சொல்லுக்கு முன்னும் சில இடங்களில் பெயர்ச்சொல் லுக்குப் பின்னும் வரும்.

பெரிது, சிறிது, நீளம், உயரம் போன்றவை பெய ருக்கு முன்னும்,

வட்டம், சதுரம், நிறங்கள் போன்றவை யெருக்குப் பின்னும் வரும்.

B) ADJECTIF INTERROGATIF (adj.)

QUEL ? (M.S.)
QUELS ? (M.P.)
QUELLE ? (F.S.)
QUELLES ? (F.P.)
} ——→ எது, என்ன

M = ஆ, F = பெ, S = ஒருமை, P = பன்மை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C) ADJECTIF INDEFINI

AUTRE (M. + F.S.) — இன்னொன்று (மற்றது)

e.g . Voici une montre — இதோ ஒரு கைக் கடிகாரம்

Voila une autre montre — இதோ இன்னொரு கைக்கடிகாரம்

AUTRES (M. + F.P.)

Voici des casquets
Et voila d'autres casquets.

குறிப்பு :- Un autre இன் பலவின்பால் d'autres
Des autres என்பது வேறு பொருட்களைக் குறிக்கும். அதாவது இங்குக் கூறப்படும் autres என்பது pronom ஐக் குறிக்கும். இதைப் பின்வரும் இதழ்களில் பார்ப்போம்.

அடுத்ததாக எண்களுக்கு வருவோம்.

(1) - UN
(2) - DEUX
(3) - TROIS
(4) - QUATRE
(5) - CINQ
(6) - SIX
(7) - SEPT
(8) - HUIT
(9) - NEUF
(10) - DIX
(11) - ONZE ஒன்சு
(12) - DOUZE தூசு
(13) - TREIZE த்ரைசு
(14) - QUATORZE கத்தோர்சு
(15) - QUINZE கேயின்சு
(16) - SEIZE செயிசு
(17) - DIX-SEPT திசெத்
(18) - DIX-HUIT திசுயூத்
(19) - DIX-NEUF திசுநெப்
(20) - VINGT வேன்

அடுத்தடுத்த இதழ்களில் மேன்மேலும் எண்களைப்பற்றிப் படிப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

∴ பாக்கித்தானம்

## பூட்டோவின் மனைவி வெளிநாடு செல்ல அனுமதி

பாக்கித்தானத்தின் இராணுவ அரசு முன்னாள் பிரதமரின் மனைவி நசுரத்து பூட்டோ வெளிநாட்டில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான அனுமதியை அளித்துள்ளது. கடந்த ஆவணி மாதம் 22ஆம் திகதி சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல அனுமதியளிக்குமாறு இவர் இராணுவ அரசைக் கேட்டிருந்தார். இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியும் இதுகுறித்து பாக்கித்தான் ஜனாதிபதி ஜியாவுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா - பாக்கித்தானத் தொடர்புகள் அதிகரிப்பு

அண்மையில் ஏற்பட்ட இந்திராகாந்தி - ஜியா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இருநாடுகளுக்கிடையேயும் உள்ள தொடர்புகளை அதிகரிக்க உதவியுள்ளது. வாணிகம், செய்தித் தொடர்பு போன்றவை தொடர்பாக இருநாடுகளும் ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளன.

∴ ஈராக்

## ஈரானின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன

ஈராக்கின் பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்ற ஈரானின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதாக ஈராக் தெரிவித்துள்ளது. ஈராக் நவீனரக ஆயுதங்களைப் பாவிப்பது ஈரானுக்கு எதிரான போ போர்நிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கருதப்படுகிறது. அதே வேளையில் இதுவரையில் நடந்த போரில் ஈரானியத்தரப்பில் 66,000க்கும் மேற்பட்டோரும், ஈராக்கிய தரப்பில் 36,000க்கும் மேற்பட்டோரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

∴ துனீசியா

## பலத்தீன தேசியப் பேரவையைக் கூட்டுவதில் சிக்கல் ...?

355 உறுப்பினர்களைக் கொண்ட பலத்தீன தேசியப்பேரவையை கூட்டுவதில் பலத்தீன விடுதலை இயக்கத்துக்குப் பெருஞ்சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. கடந்த சிலமாதங்களுக்கு முன்னால் இலெபனானில் ஏற்பட்ட பிரச்சினைகளின்போது ஒன்றுபட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்த இயக்கங்களிடையே கருத்து வேற்றுமைகள் இப்போது பெருமளவு வளர்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. பலஸ்தீனிய இயக்கத் தலைவர் யசீர் அரபாட்டுக்கும், சிரிய ஜனாதிபதி அசாத்திற்கும் உள்ள மனக்கசப்பே இதற்கு அடிப்படைக் காரணமெனவும் கருதப்படுகிறது. பி.எல்.ஓ.வின் உயர் நிர்வாகபீடம் தேசியமன்றத்தைக் கூட்டுவதற்கான திகதியை நிர்ணயிக்கத் தவறிவிட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இசரயேல்

### இசரயேல் இராணுவத் தலைமையகத்தில் குண்டு வெடிப்பு!

தென் இலெபனானில் உள்ள டயர் (       ) நகரில் அமைந்திருந்த இசரேலிய இராணுவத் தலைமைக்காரியாலயம், குண்டொன்று வெடித்ததனால் தரைமட்டமாகியது. இச்சம்பவத்தில் 89 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் 75 பேர் இசரயேலியர்களும், 14 பேர் அராபியர்களுமாவர். இசரயேலிய இராணுவச் சரித்திரத்திலேற்பட்ட மிக மோசமான விபத்து இது எனக் கருதப்படுகின்றது. இக்குண்டுவெடிப்புக்குத் தாமே காரணம் என பல பலஸ்தீன, சிரிய கொரில்லா இயக்கங்கள் உரிமை கோரி உள்ளன.

### சப்ரா-சதீலாவில் பலஸ்தீனப் படுகொலை ஆய்வில் தீர்ப்பு!

சப்ரா-சதீலாவில் பலஸ்தீனியர்களைப் படுகொலை செய்ததில் இசரயேலியருக்குள்ள பங்கு பற்றி ஆராய அமைக்கப்பட்ட விசாரணைக்குழு இசரயேலியப் பிரதமர் பிகின், பாதுகாப்பு அமைச்சர் சரோன், வெளியுறவு அமைச்சர் சமீர், படைத்தலைவர் எய்டன், பட்டாள உயர்அதிகாரி துரோரி உட்பட எட்டுப் பேருக்கு எதிராகக் கருத்தறிவித்துள்ளது; அவர்களுக்கு எழுதியுள்ள மடலில் "ஏன் தங்கள்பேரில் குற்றம் சுமத்தக்கூடாது என்பதற்கான விளக்கங்களை, 15 நாட்களுக்குள் விசாரணைக்குழுவிற்கு அனுப்பும்படி" பணித்துள்ளது. விசாரணைக்குழுவின் இறுதித் தீர்ப்பு அடுத்த ஆண்டு தை மாதத்தில் அறிவிக்கப்படும் என்று தெரியவருகிறது.

### இசரயேலியப் பிரதமர் பிகின் விரைவில் பதவி விலகுவாரா?

பலஸ்தீனியப் படுகொலைக்கான காரணங்களை ஆராயும் விசாரணைக்குழு இசரயேலியப் பிரதமர் பிகினுக்கு எதிராகக் கருத்தறிவித்துள்ள இந்த நேரத்தில், பிகினின் மனைவி அலிசாவும் அண்மையில் மரணமாகியுள்ளார். இதுவரை எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் உலகக் கருத்தையும் புறக்கணித்து தாமே பதவியில் தொடர்ந்து இருக்கப்போவதாக அறிவித்த பிகின் இந்த இரு பேரதிர்ச்சிகளால் பதவி விலகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அவரது "லிக்லூட்" கட்சிக்கு இன்னும் மக்கள் செல்வாக்கு இருந்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ ஈரான்

ஈரானில் ஈராக்கிய அரசு எதிர்ப்புக்குழு உதயம்

ஈராக்கியத் தலைவர் சதாம் உசேனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக ஈராக்கியக் குழு ஒன்று ஈரானில் உதயமாகியுள்ளது. ஈரானிய மதத் தலைவர் கோமேனியின் வழியில் ஈராக்கிலும் இசுலாமியப் புரட்சியை ஏற்படுத்தி உசேனின் ஆட்சியைக் கவிழ்க்க மக்கள் அணி திரள வேண்டும் என்று இக்குழுவின் தலைவர் அக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

∴ எல் சல்வதோர்

இடதுசாரி கொரில்லாக்களுக்கு வெற்றிகள் குவிகின்றன!

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிவரும் எல் சல்வதோரின் இடதுசாரி விடுதலைக் கொரில்லாக்கள் சமீபத்திய பலதாக்குதல்களில் வெற்றிகளை ஈட்டியுள்ளனர். நாட்டின் வடபகுதித் தலைநகரில் நடந்த இருநாட் சண்டையில் அமெரிக்கா'வில் சிறப்பு பயிற்சி பெற்ற இராணுவத்தினரில் 95 பேர் கொல்லப்பட்டும், காயமுற்றும் உள்ளனர். 5 வார கொரில்லாக்களின் தாக்குதல்களில் 671 அரச இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். என்றும் 200 பேர் கொரில்லாக்களினால் கைப்பற்றப்பட்டுமுள்ளனர் என்றும் கொரில்லாக்களின் வானொலிச் சேவை அறிவித்துள்ளது. அதே வேளையில் இரு கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாகவும், 6 பேர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வட, வடகீழ் மாகாணங்கள் கொரில்லாக்கள் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மின்சக்தி நிலையங்களின்மீது தாக்குதல்

எல் சல்வதோரின் மிகப் பெரிய நீர் மின்சார நிலையம் இடதுசாரி கொரில்லாக்களினால் குண்டுவீசித் தாக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் அரைவாசிப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.

∴ சீனா

சீன அமைச்சரவையில் மாற்றங்கள்

சீன அமைச்சரவையின் முக்கிய அமைச்சுக்களாகிய பாதுகாப்பு, வெளிவிவகாரத்துறைகளின் அமைச்சர்கள் மாற்றப்பட்டுள்ளார்கள். கடந்த 6 வருடங்களாக வெளிவிவகார அமைச்சரகப்பதவிவகித்த அவாங் குவாவின் இடத்துக்கு ஊ குவாயினும், கடந்தவருடம் சித்திரை தொடக்கம் பாதுகாப்பமைச்சராக இருந்த கெங்-பயோவின் இடத்திற்கு சங் எபிங்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். சீனாவின் உயர் அதிகாரிகள் பலர் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ அமெரிக்கா

## தடை நீக்கம்!

ஐரோப்பிய நாடுகளாகிய பிரான்சு, மே.செருமனி, இத்தாலி, பிரித்தானியா, ஆகிய நாடுகள் உருசியாவுடன் மேற்கொண்ட எரிவாயு கொள்வனவு ஒப்பந்தத்தை எதிர்த்து அத்திட்டத்திற்கு உபகரணங்களை விநியோகிக்கக் கூடாது என அமெரிக்க-ஐரோப்பிய கூட்டுநிறுவனங்களுக்கு தான் விதித்த தடையை நீக்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி இரீகன் அறிவித்துள்ளார். இது இரீகனின் கொள்கைக்கு கிடைத்த பெரும் தோல்வியாகக் கருதப்படுகிறது. பிரித்தானியா, இத்தாலி, மே.செருமனி ஆகிய நாடுகள் இத்தடை நீக்கம் தொடர்பாக வரவேற்புத் தெரிவித்தபோதும்பிரான்சு இது குறித்து கருத்து வெளியிட மறுத்துள்ளது.

## இரீகனின் பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் வேண்டும்..!

அமெரிக்க ஜனாதிபதி இரீகனின் பொருளாதாரக் கொள்கைகளில் பெருமளவு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற குரல் அமெரிக்காவில் ஒங்கிஒலிக்க ஆரம்பித்துள்ளது. அவருடைய குடியரசுக்கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானோரும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர். சமீபத்தில் நடந்த காங்கிரசுத் தேர்தலில் குடியரசுக் கட்சிக்கு கிடைத்த தோல்வி இரீகனின் தவறான பொருளாதார-வெளிநாட்டுக் கொள்கைகளினால் ஏற்பட்டதாகவே கருதப்படுகிறது.

## அமெரிக்கத் தூதுவரின் கடுமையான கண்டனம்

எல்சல்வதோருக்கான அமெரிக்கத் தூதுவர் டீன் கன்ரன், எல்சல்வதோர் இராணுவத்தினரின் மனிதஉரிமைமீறல் செயல்களை வன்மையாகக் கண்டித்துள்ளார். இராணுவத்தினரின் செயல்கள் வரம்புமீறியவை, கொடுமையானவை என்று கூறிய இவர் எல்சல்வதோரில் காணாமல்ப் போகும் பலர் இவ் இராணுவத்தால் கொல்லப்படுகிறார்கள் என்றும் சமீபத்தில் காணாமல்ப் போய்விட்ட 15 இடதுசாரிக் கொரில்லாக்களின் மறைவிற்கும் இந்த இராணுவமே காரணமென்றும் குற்றம் சாட்டியுள்ளார். இத்தகைய செயல்கள் விரைவில் எல்சல்வதோருக்கான அமெரிக்கஉதவிகளை தடைசெய்வதாகவே அமையும் என்று மேலும் கூறியுள்ளார். ஆனால் எல்சல்வதோரின் அரசிற்கு சமீபத்தில் நற்சாட்சிப் பத்திரம் வழங்கி இராணுவஉதவிகளை அதிகரித்த இரீகனின் நிர்வாகத்திற்கு தூதுவரின் இந்த வெளிப்படையான பேச்சு பெரும் கசப்பை ஏற்படுத்தியுள்ளது, உண்மைகளைப் பகிரங்கப்படுத்தியதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் டீன் கன்ரன்மீது விரைவில் நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

---

" எத்தனை நாள் போராட்டம் நடப்பது இங்கே?
உயிர் குடிக்க எழுக நாடே!"

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ நிக்கரகுவா

நிக்கரகுவாவில் அமெரிக்கத் தலையீடு

நிக்கரகுவாவின் புரட்சிகர சாண்டினிய அரசைக் கவிழ்ப்பதற்கான சதிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதை "நியூசுவீக்" இதழ் பகிரங்கப் படுத்தியுள்ளது. நிக்கரகுவாவின் அயல்நாடாகிய ஒண்டுராசுக்கு அதிக அளவு ஆயுதவுதவிகளை வழங்கி எல்லைச் சண்டையை ஏற்படுத்தியும் சாண்டினிய அரசுக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்கு முன்னுள் முதலாளித்துவக் கைக்கூலிப் படைகளுக்கு ஆயுதமும், பயிற்சியும் கொடுத்துவருவது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கத் தூதுவரே இச்சதிகளைப் பொறுப்பெடுத்து முன்னின்று செய்வதையும் அவ்விதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

∴ ஆர்சண்டைனு

அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளை இராணுவம் நிராகரித்தது

1984ஆம் ஆண்டில் அர்சண்டைனுவில் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட சுதந்திர அரசாங்கத்தை அமைப்பதற்கு அர்சண்டைனுவின் முக்கிய 5 அரசியல் கட்சிகளும் தெரிவித்த ஆலோசனைகளை இராணுவ ஆட்சியாளர்கள் நிராகரித்துள்ளனர். அதே வேளையில் 1970 ஆம் ஆண்டுத் தொடக்கம் அர்சண்டைவில் காணமற் போனதாகக் கருதப்படும் எண்ணற்றோரின் எலும்புக்கூடுகள் நாட்டின் பல இடுகாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (இடுகாடு - மயானம்)

∴ போலந்து

வலேசா விடுதலை செய்யப்பட்டார்

கடந்த 11 மாதகாலமாக போலந்தின் இராணுவ ஆட்சியாளரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சுதந்திரத் தொழிற்சங்கமான 'சொலிதாரிட்டி' தலைவர் லெக் வலேசா காவலிலிருந்து திடீரென விடுதலை செய்யப்பட்டார். இவரது விடுதலையை போலந்து மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றுள்ளனர். அதேவேளையில் விரைவில் போலந்தில் சுமுகமான நிலை ஏற்படுத்துவதுகுறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது கொள்கைகளில் ஓரளவு மிதவாதம் காணப்பட்டாலும் அவரது உறுதி இன்னும் குன்றவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. உருசியத்தலைவர் பிரசினேவின் மறைவுக்கு மறுநாளே இவர் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது!

---

" அரியேற்றைச் சிறைப்படுத்தின்
அதன் முழக்கம் அடங்கிப் போமோ! "

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ சோவியத் யூனியன்

சோவியத் ஜனாதிபதி பிரசினேவ் காலமானார்!



சோவியத்யூனியனின் ஜனாதிபதியாகக் கடந்த 18 ஆண்டுகளாக பதவிவகித்த லியோனிட்டு பிரசினேவ் தனது 75ஆம் வயதில் இருதய நோயால் காலமானார். இவரது அரசியல் வாழ்க்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவரது ஆட்சிக்காலம் உருசிய மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பெரிதும் உயர்த்தியுள்ளது. அத்துடன் உருசிய இராணுவத்தின் சிறப்புத்தன்மை அதிகரிக்கவும், புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் வளர்ச்சியடையவும் இவரது ஆட்சி காரணமாக இருந்துள்ளது. அத்தோடு சர்வாதிகார அரசாங்கங்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களுக்கு உதவியும் உள்ளார். இவரது மரண வைபவங்களில் அமெரிக்க உதவி ஜனாதிபதி, சீன வெளிநாட்டமைச்சர், இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி உட்பட பல தலைவர்கள் கலந்து கொண்டனர்.

புதிய தலைவர் ஆந்திரபோவ்!



பிரசினேவின் மறைவினால் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் புதிய தலைவராக யூரி. வி. ஆந்திரபோவ் கட்சியின் மத்திய குழுவினால் ஒருமனதாகக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 68 வயதான இவர் உருசிய உளவு நிறுவனமான கே.ஜி.பி.யின் முன்னாள் தலைவராவர்.

∴ வட அயர்லாந்து

பாராளுமன்றப் புறக்கணிப்பு!

வட அயர்லாந்தின் பாராளுமன்றத்தை தேர்தலில் வென்ற கத்தோலிக்கக் கட்சிகள் யாவும் புறக்கணித்துள்ளன. 78 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தை 14 உறுப்பினர் கொண்ட சமுக சனநாயகத் தொழிலாளர் கட்சியும் 5 உறுப்பினர் கொண்ட ஐ.ஆர்.ஏ.வின் அரசியல் பிரிவான சின் பெயின் கட்சியும் புறக்கணித்துள்ளன.

∴ பிரான்சு

அரசியல் அடைக்கலக் கொள்கையை பிரான்சு கட்டுப்படுத்தும்!

அரசியல் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு அடைக்கலமளித்துவரும் பிரான்சின் கொள்கை பலநாடுகளின் கண்டனத்துக்கு இலக்காகி ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. பல வன்முறையாளர்கள் அடைக்கல் போர்வையில் தமது செயற்பாடுகளுக்கு பிரான்சைத் தளமாக்குவதுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் செம்படையினர், இசுப்பெயின் பாசுக்கு தீவிர வாதிகள், மத்தியகிழக்கு தீவிரவாதக்குழுக்கள் ஆகியவற்றின் அண்மைக்கால வன்செயல்களே அரசின் இந்நடவடிக்கைக்குக் காரணம்.

கணிப்பானில் (கம்பியூட்டர்) வன்முறையாளர் பட்டியல்!

பெருகிவரும் வன்முறைகளைத்தடுக்க 25,000 பேருள்ள பட்டியல் ஒன்றை பிரஞ்சு அரசு கணிப்பானில் இணைத்துள்ளது. இத்தொகை 60,000 ஆகலாம் என்றும் தெரிகின்றது. இதனால் வன்முறையாளர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து கவனிக்க இயலும். இதில் ஒருசிலரைத்தவிர மற்றையோர் வெளிநாட்டவரும், அரசியல் அடைக்கலம் பெற்றவருமாவர்.

பற்றுக்குறையைச் சமாளிக்க பல உதவிகள் குறைப்பு!

பிரான்சில் 3ஆவது பிள்ளைமுதல் பிள்ளைபெறுவோர்க்கு அளிக்கப்பட்டுவந்த உதவி பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வேலையிழந்தோர்க்களிக்கப்படும் உதவியிலும் பல மாற்றங்களும், வெட்டுக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதேபோல, தாமே விரும்பி ஒய்வுக்காலத்திற்குமுன்பே பதவி விலகுவோருக்கு இதுவரை தந்த 65 % ஓய்வூதியம் (பென்சன்) இனி 55 % ஆகிவிட்டது.

∴ இந்தியா

ஆசியது (முதல் ஆசிய விளையாட்டுப் போட்டி) தொடங்கியது!

டில்லியில் முதல் ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டி – ஒலிம்பிக்கைப் போல – கார்த்திகை 19இல் தொடங்கியது. இதில் எல்லா ஆசிய நாடுகளும் பங்கு கொள்கின்றன. இதுவரை வெற்றியீட்டிய நாடுகளில் சீனவும், சப்பானும், இந்தியாவும் முன்னணியில் உள்ளன.

பிரஞ்சு தலைவர் மித்திரான் இந்தியா வருகை!

வளரும் 3ஆம் உலக நாடுகளுக்கு உதவும் எண்ணத்துடன் அண்மையில் எகிப்துக்குச் சென்ற மித்திரான் இப்போதுஇந்தியாவுக்கு 4 நாள் நல்லெண்ணச்சுற்றுலா சென்றுள்ளார். இதனால் இந்தியா வழங்கும் கணக்கற்ற பொருளாதாரவாய்ப்புக்களை மற்றநாடுகள் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என்றும், ஆப்கானியச் சிக்கலில் இந்தியாவின் வற்புறுத்தல் கொள்கையினால் ஒரு தீர்வு கிடைக்கலாம் என்றும் இந்திரா காந்தி பிரஞ்சு நாளேடான "இலே மோந்து"க்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இம் மலரில் இருக்கும் பிரஞ்சு செய்திகளை உங்கள் பிரஞ்சு நண்பர்களுக்கு கூறித்துக்கொடுக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் பெருங்காவியத்தின்
* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *
சிறு * * திருத்தம்

"பேயனுக்குப் பெயர் தமிழன்"

இரவு முழுக்க கண்விழிக்கும்--எத்தனையோ நட்சேத்திரங்கள்
வரலாற்றை மாற்றும்--வால் நட்சேத்திரம் எப்போதுதான்
-தோன்றும்

அதிகாலையிலும்-அந்திமாலையிலும்-எத்தனையோ மலர்கள்
எப்போதாவது மலரும் குறிஞ்சிமலர் எம்நினைவில் நிற்கும்
அச்சமில்லை அச்சமில்லை எனப்பாடிய பாரதியே!
விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என்னசெய்ய நினைத்தாய்?
பாட்டுக்கொரு புலவனே பாடிப் புலம்பினன்.

இசரயேலுக்கு-மோசேஸ் போல் இந்தியாவிற்கு-காந்தி போல்
இறைவன்-தந்தை செல்வாவை தமிழனுக்கு தலைவராக்கினர்
எம் அன்னையர் பூமி-தந்தையர் தேசம் தமிழ் ஈழத்தை
மீட்டு எடுங்கள்-கட்டியம் கூறினர்-காவியம் தொடங்கியது
பேச்சுவார்த்தைகள் அர்த்தால் போராட்டங்கள்-சத்தியாக்கிர
-கங்கள்

பாதை தொடருகிறது-பயணம் நீள்கிறது-எல்லாம்
பரிகாசத்துக்கு உரியதாகிறது.

இன்றைய தமிழனின் இலக்கியமே! சிவகுமாரா!
மறந்திடுவோமா உன்னை - என்றும்
இறவாத் தமிழோடு நீயிருப்பாய்
பொழுதெல்லாம் - எங்கள் செல்வம் கொள்ளை போகவோ!
நாங்கள் சாகவோ - அழுது கொண்டிருப்போமோ
ஆண்பிள்ளைகள் அல்லவோ - பாடினன் பாரதி
உயிர் வெல்லுமோ உயிரையே தந்தான்.

மானம் சிறிதென்று - வாழ்வு பெரிதென்று எண்ணும்
ஈனக்குலத்தினிலே - உனக்கும் சீடர்கள்!
சிறுகூட்டந்தான் - சிறுத்தைகள் ஆனர்கள்!
சிங்கம் என தனைச்சொல்லும் சிறு நரிக்கூட்டமுள்
பொங்கியெழும் புலியானர்கள்.
நாதியற்ற கூட்டமென நினைத்தவர்கள்
நடுங்கி - தடுமாறி - நாயானர்கள்.

மாதமொரு எரியூட்டல் - நாளுக்கொரு கொலை
பாதக செயலுக்கோ முடிவில்லை.
எட்டுத் திக்கும் எங்கள் கதை!
சிங்கமென - வந்தலிங்கம் அஞ்சிவிட்டதா?
மடையர்களே - மாவுமி சொல்லுகிறேன்:
சத்திரம் வருகிறது - சற்று இளைப்பாறுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளும் பேச்சு வார்த்தைகள் – கொலைகள் நடக்கும்போது!
கொமிசன் விசாரணைகள் .........
கவிஞா! உனது வாக்கு பொய்க்குமா?
பேயனுக்குப் பேர் தமிழன்தான்!

" செல்வம் "

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

## வங்குரோத்து அடைந்துவிட்டது சிறீலங்கா!

## வற்றிவிட்டன கடன் ஊற்றுக்கள்!

இன்றைய சிறீலங்கா அரசாங்கம் முற்றாகவே கருவூலத்தைக் காலியாக்கிவிட்ட வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டது! மக்களின் அத்தியாவசியத் தேவைக்கான மானியங்களை வெட்டிக்கூட அரசாங்கம் மீள முடியாத ஆழக் கடனில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. அதன் இன்றைய நிலை இதுதான் ... ...

* சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி ஆகிய ஏகாதிபத்திய அமைப்புக்களுக்கு சிறீலங்கா கொடுக்க வேண்டிய கடன்தொகை 3,000 கோடி உருபாக்களுக்குமேல் ஆகும்.

* சிறீலங்கா அரசாங்கத்தின் கடனுக்கான வட்டிமட்டும் இலங்கை ஏற்றுமதிக்குக் கிட்டும் தொகைக்கும் அதிகமானது!

* வளர்ச்சியின் பொருட்டு 1947ஆம் ஆண்டுமுதல் 1976ஆம் ஆண்டு வரை சகல அரசாங்கங்களும் பெற்ற கடன்களிலும் பார்க்க இன்றைய யூ.என்.பி. அரசாங்கம் பெற்ற கடன் பலமடங்கு கூடியது. 1976இல் 1,562 கோடி உருபாவாக விளங்கிய அரச கடன் 1981ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 5,866கோடி உருபாவாகியது. இன்று அது 6,500கோடி உருபாவாகிவிட்டது.

* திறந்த ஏற்றுமதி–இறக்குமதி பொருளாதாரக் கொள்கையின்கீழ் தேவையற்ற பொருட்களை நாட்டில் கொண்டுவந்து குவிப்பதால் அவசியமான சுதேசிக் கைத்தொழிற்சாலைகளின் ஆயிரக்கணக்கானோரின் வேலை பறிபோயிருக்கிறது. 600க்கும் மேற்பட்ட சிறு கைத்தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன! வேலையில்லாத் திண்டாட்டம் 50%க்கும் மேல் பெருகுகிறது! இயங்குகின்ற தொழிற்சாலைகளின் வினைத்திறனும் 80%ஆக வீழ்ந்துவிட்டது!

* பொதுமக்களின் வசந்தத்தின் தோற்றுவாய் என்று கூறிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித்திட்ட காண்டிராக்டுக்காரர்கள், வஞ்சகர்கள், சுரண்டல்காரர்களின் பாசறையாக மாற்றமடைந்துள்ளது. காலம் காலமாக – பரம்பரை பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறையாக மகாவலிக் காணிநிலத்தில் குடியிருந்த விவசாயக்குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றி இந்த நிலங்கள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இன்றுவரை இத்தகைய நிலம் 1,10,250 ஏக்கர்வரை இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சிறீலங்கா அமெரிக்காவிடம் பெறும் வருடாந்தரக் கடன் உதவி 100 மில்லியன் டாலர். மேற்கத்திய நாடுகளிடம் பெறுவது 1 பில்லியன் டாலர்.

சிறீலங்கா உட்பட 20 நாடுகள் தங்கள் முதலையோ வட்டியையோ செலுத்த முடியாது என உலக வங்கியிடம் கூறியுள்ளன.

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

ஒவ்வொரு தமிழ் இளைஞனும் பயங்கரவாதி என்று சந்தேகத்தில் சிறை செய்யப்பட்டு கடும் சித்திரவதைகட்கு உள்ளாகும் இன்றைய நிலை அவனது குடும்பத்திலிருந்தும், நண்பர்கள்-உறவினர்களிடமிருந்தும் மேலும் பத்துப் "புலி"களை பிறக்கச் செய்யும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன!

– காமினி நவரத்தின –
(சற்றடேறிவியூ)

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

## கூட்டிற்கு அமைப்போம் குழி!

"ஆட்டிப் படைக்கும் சிங்கள அரசுக்கு
ஈட்டியால் செந்தமிழர் தீட்டும் இறுதியுரை!
காட்டிக் கொடுக்கும் கயவர் இங்கு உள்ளவரை
நாட்டின் விடுதலைக்கே நாவசைக்க மாட்டீர்கள்!
கேட்டோம்; கிளர்ந்தெழுந்தோம்; கீழ்என்றே எண்ணிவிட்டீர்!
கூட்டிலுள்ள ஆவி கொதித்திடுமுன், செங்குருதி
சூட்டிலுல் பொங்கிச் சுழன்றிடுமுன், தமிழீழக்
கோட்டைக் கடந்துய்வீர்! இன்றேல் கொடிமுகத்து, உம்
கூட்டிற்கு அமைப்போம் குழி!"

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

"செந்தமிழ்க்கு வாழ்ந்தேன்! செத்தேன் தமிழர்க்கு என்றால்
இந்தப் புகழ் போதுமே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

## வேள்வியில் பலஸ்தீனம்

— கிறிஸ்டி —

பாபி இராசுமன் ஓர் அமெரிக்க இளைஞன். 2ஆம் உலகப் போரில் அமெரிக்க விமானப் போரில் சேவை ஆற்றி, காயமுற்றதால் ஓய்வு பெற்றவன். இப்போது எருசலேமின் இப்ரு மொழிப் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் மாணவன். அன்று மாலை, மாணவர் குடியிருப்பில் தனது யூத மனைவியுடன் கட்டிலில் ஓய்வாகச் சாய்ந்திருந்தான். அப்போது ஒரு துண்டுத்தாள் கதவின் கீழ் இடுக்கில் நுழைக்கப்பட்டது. அத்துண்டுத்தாளில் கண்ட செய்தி அங்கே ஓர் அச்சங்கலந்த அமைதியை ஏற்படுத்தியது. அது 'ககானா'வின் அழைப்பிதழ். தனது இரகசிய இராணுவமாக 'பல்மா'வில் சேருவதற்கான அறைகூவல். அவன் விடையை எதிர்நோக்கி அவன் மனைவி உற்றுநோக்கியபடி இருந்தாள். பக்கத்திலுள்ள அலமாரியில் — அப்படையில் சேர்ந்துள்ள அவன் மனைவியின் சுழல் துப்பாக்கியும் பட்டியும் ஒளித்துவைக்கப்பட்டிருப்பதையும் அவன் அறிவான். மனைவியின் போரில் தான் ஒரு பார்வையாளனாக இருக்கமுடியாது என்று உணர்ந்து, ஒரு பெருமுச்சுடன் "நல்லது, நான் சேருகிறேன்" என்றான். இவ்வாறுதான் 'ககானா' தனது படைக்கான ஆட்களைச் சேர்த்தது. பல்கலைக்கழக மாணவர்கள் 'ககானா'வின் படைப்பிரிவில் பெரும்சக்தியாக விளங்கினார்கள்.

'ககானா'வின் மிக முக்கிய ஒழுங்குவிதி "இரகசியம் காத்தல்" உறுப்பினர்களின் புகைப்படங்களை அது வைத்திருக்கவில்லை. மிகக் குறைந்த அளவிலான எழுத்துக் குறிப்புக்களே தோட்டங்களின் கீழிருந்த நிலவறைகளில் இருந்தன. பள்ளிக்கூடங்களும், தொழிலாளர் சங்கங்களும் பயிற்சி நிலையங்களாக விளங்கின. பலத்த காவலுடன் கராத்தே போன்ற தற்காப்புப் பயிற்சிகளும் கயிற்றில் ஏறுதல், வீடொன்றில் அத்துமீறி நுழைதல், ஓடும் காரிலிருந்து குதித்தல் பேர்ன்ற பயிற்சிகளும் அங்கு நடந்தன. பிரிட்டிசு போலீசார் அவ்விடத்தைச் சூழ்ந்தனர் என்ற எச்சரிக்கை ஒலி கேட்ட ஒருகணத்தில் அப்பயிற்சியாளர் விளையாடுகின்ற மாணவர் போன்றோ, அரட்டை அடிக்கின்ற தொழிலாளராகவோ மாறிவிடுவர். அதனைத் தொடர்ந்து 2, 3 மாதங்களுக்கு வெளிக்களப் பயிற்சி அளிக்கப்பட்டது. மிகத் தொலைவில் 'துவக்குச் சத்தத்தை விழுங்குகின்ற' பாலைவனப் பகுதியில் — கொடூர வெயிலில் — கால்நடையாக அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது. ஆயுதங்களின் அருமை கருதி, கெட்புத் திணிக்கப்யட்ட தோடம் பழங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருளைக் கிழங்குகளும் போலி எறிகுண்டுகளாகப் பாவிக்கப்பட்டன. இறுதியாக ஒரு மாதத்திற்கு கொரில்லாப் பயிற்சியும் - இராச்சண்டை பயிற்சியும் அளிக்கப்பட்டன. பிரித்தானியரின் இராணுவத்தளங்களிலிருந்து களவாடப் பட்ட "யுத்தப் பயிற்சி நூற்கள்" இவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் உலகப் போர் பலஸ்தீன யூத மக்களுக்குச் சண்டையில் நேரடிப் பயிற்சியைக் கொடுத்தது. 43,000 யூத இளைஞர்கள் தமது சொந்த விருப்பில் 2ஆவது உலகப் போரில் சேவையாற்றினர். 'ககானு'வின் ஆயுதங்கள் பலஸ்தீனத்தில் பல பகுதிகளில் இரகசிய மறைவிடங்களில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன. அம்மறைவிடங்களை 'ககானு'வின் படைத்தளபதியும், அவரது ஆயுத விற்பன்னனுமாகிய இருவரே அறிவர். அவ்வாயுதங்கள் தேவை ஏற்படும்போது போர் வீராங்கனைகளின் மார்புக்கச்சைகளிலோ - உள் அங்கிகளிலோ ஒளிக்கப்பட்டு - அல்லது கால்களோடு இணைக்கப்பட்டு வேறு இடங்களுக்குக் கடத்தப்பட்டன. இவ்வாறு 'ககானு' அரபுமக்கள், பிரித்தானியப் போலீசார் ஆகிய இருவரது கண்களிலும் மண்ணைத் தூவி இயங்கியது.

உலகின் யூதப் பணக்காரர்களால் சுவிட்சர்லாந்து வங்கிகளில் போடப்பட்ட பணத்தைக் கொண்டு, ஐரோப்பிய நகரங்களில் போலிப் பத்திரங்களைக் காட்டி வாங்கப்பட்ட ஆயுதங்கள் கள்ளக்கடத்தலாக - பிரித்தானிய சுங்க அதிகாரிகளுக்கு பல இலட்சம் டாலர்கள் கையூட்டாகக் கொடுக்கப்பட்டு பலஸ்தீனத்தில் இறங்கின. ஏராளமான ஆயுதங்கள், களவாக விலைக்குப் பெறப்பட்ட எத்தியோப்பிய மன்னரின் கடிதத் தாளில் எழுதப்பட்ட விண்ணப்பத்தின்மூலம் - அவரது நாட்டுக்கென்று வாங்கப்பட்டன. இவ்வாயுதங்கள், உழவு எந்திரங்கள், புல்டோசர்கள் முதலியவற்றிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு 'ஒட்டுவேலை' செய்யப்பட்டு பின்னர் பலஸ்தீனத்தை அடைந்தன. இவ்வாறு 3 சிறுவிமானங்களும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கடத்தல் செய்யப்பட்டன. அமெரிக்காவில் உதவாதென - இரும்பு விலைக்கு விற்கப்பட்ட ஆயுதத் தொழிற்சாலையின் எந்திரங்களை மலிவாக வாங்கி - சந்தேகம் எழாதவாறு 75,000துண்டுகளாகக் கழற்றி - புடவைத் தொழிற்சாலைக்கான எந்திரங்கள் என்ற பேரில் ஒரு கற்பனையான அரபுப் புடவைத் தயாரிப்பாளனுக்கு அனுப்பப்பட்டன. அனுப்பியவைகளில் ஓர் ஆணிகூடக் குறைவுபடாமல் சுங்கப் பகுதியைக் கடந்து 'ககானு'வின் நிலவறையை அடைந்தது. அங்குதான் யூதரின் முதல் ஆயுதத் தொழிற்சாலை உருவாகியது.

பலஸ்தீனத்தைப் பிரித்து யூதருக்கென்றொரு நாட்டை உருவாக்க ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றிய அன்றிரவு யூதர் மகிழ்ச்சியில் குதூகலித்ததும் யூத-அரபுப் பிரிவினர் தமது இரகசியப்படைகளை ஆயத்தப்படுத்தியதும் பின்னர் அது கலவரமாக வெடித்து 2வாரம் நீடித்ததும் அதில் 93 அரபுக்கள், 84 யூதர், 7 ஆங்கிலேயர் இறந்ததும் இடைக்கால நிகழ்ச்சிகளாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிஞர் பொன்னுரைகள் !

*********************

தைரியத்துடன் முன்னேறுங்கள்
விலங்குகளை உடையுங்கள்.
ஆதிக்கக்காரர்களின் ரத்தக்கறை
படிந்த சங்கிலிகளைக் கழற்றி எறியுங்கள்.
இளமையின் வேகத்தோடு,
நெருப்பு அலைகளாக—
புதியதோர் மகிழ்ச்சிக்கு முன்னேறுங்கள்.
முன்னைக் காட்டிலும்5 துணிச்சல்
உள்ளவர்களாக,

வாழ்வை நோக்கி, சுதந்திரம் என்ற
வனப்புமிக்க சூரியனை நோக்கி,
மகத்தான படைப்பாளிகளின்
பிரகாசமான லட்சியங்களை நோக்கி,
உங்கள் தந்தையரின் ஆணைகளை
நினைவில் கொண்டு,
அணிவகுத்துச் செல்லுங்கள்; இளம்
படை வீரர்களே!

பிரஷ்னேவ்,

****************************************

மார்க்சிச அரசியல் வேலைத்திட்டத்தில் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்றால், சரித்திரப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி அரசியல் சுயநிர்ணய உரிமையை, சுதந்திரமான அரசை அமைப்பதைத்தவிர வேறெந்த அர்த்தத்தையும் அது குறிக்கவில்லை.

∴ இலெனின் ∴

****************************************

# "தமிழ்முரசு" "எரிமலை" வாசகர்கட்கு...

அன்பு வாசகர்களே !

"தமிழ்முரசு", "எரிமலை" ஆகிய இரு இதழ்களும் இணைந்து "தமிழ்முரசு" என்னும் பெயரிலே இனி வெளிவரும் என்னும் நற்செய்தியை மகிழ்வுடன் அறியத் தருகிறோம். இதுவரை காலமும் நீங்கள் தனித்தனியே இரு இதழ்களுக்கும் அளித்து வந்த பேராதரவைத் தொடர்ந்து எமக்கு அளித்துவருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். இரு இதழ்களின் சந்தாதாரர்களுக்கும் தமிழீழ விடுதலைப் பேரவை - பிரான்சினால் வெளியிடப்படும் தமிழ்முரசு சந்தாக்காலம் முடியும்வரை தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும்.

தமிழீழ விடுதலைப் பயணத்தில் "தமிழ்முரசு" தனது பங்களிப்பை சிறப்பாக்க தொடர்ந்து உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

நன்றி !

****************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச மன்னிப்புச் சபை

## அறிக்கை - 1982

************************

<u>சிறீலங்கா</u>

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் பெயர் குறிப்பிடப்படா இடங்களில் இளைஞர்கள் விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்படுவது நீடிக்கிறது. இச்சட்டம் அரசாங்கத்தின் வரம்பு மீறிய செயல்களுக்கு இச்சட்டம் பாதுகாப்பாக இருக்கிறது. தடுப்புக்காவலிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கொடுமையான முறையில் போலீசு - இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு வருகிறார்கள். வடமாகாணத்திலுள்ள தமிழ்ப்பேசும் மக்களில் பலர் தடுப்புக் காவலில் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது. தமிழ் இளைஞர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அரசியல் சம்பந்தமில்லாத சிலரும் தடுப்புக்காவலில் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளையில் 1979ஆம் ஆண்டு யூலை மாதத்தில் 'காணாமல் போய்விட்ட' 3 தமிழ் இளைஞர்கள் பற்றி சபைக்கு அரசு இன்னும் எந்தச் சரியான தகவலையும் தரவில்லை.

************************************
************************************
************************************

<u>செய்தி : அரசு-கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் தொடரும்!</u>



# அன்பான வாசகர்களே!

பிரதி வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் நாம், "செந்தமிழ் ஓசை" எனும் தீந்தமிழ் நிகழ்ச்சியை, F.M. 98.2 mHz இல், மாலை 8½ முதல் 9½ மணி வரை உங்களுக்கு வழங்கிகின்றோம். எமக்கு இந் நிகழ்ச்சியை ஒலிபரப்ப ஆவன செய்வோர்

# Radio Soleil

ஸ்தாபனத்தார்.

இல. 35, ரூ ஸ்டிபின்ஸன் - பரிஸ் 75018.
எமது பிரத்தியேக தொலைபேசி - (ஒலிபரப்பின் போது - மட்டும்) இலக்கம் 262-14-18.

"செந்தமிழோசை" யுடனான சகல தொடர்புகட்கும்

SENTAMILOSAI,
N° 8, RUE CHARLES MOUREU,
75013 - PARIS.
(Métro : TOLBIAC / PLACE D'ITALIE)


***

## உலகத் தாய்க்குத் தீட்டு ...!

நாம் வாழும் இன்றைய வரலாற்று நெருக்கடியுள்ள காலகட்டத்தில், சுழலிடைத் துரும்புபோல் அகப்பட்டிருக்கும் நாம் வாழும் சமூகம் இந் நெரிசலிலிருந்து தப்புவதற்கு எம்மிடம் கோரி நிற்பது என்ன என்பதை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். புரட்சிகள் வெடிக்கும் இன்றைய காலகட்டத்தில் வாழும் நாம் பலத்தீனத்தில் பெருக்கெடுக்கும் இரத்த வெள்ளத்தை உலகத் தாய்க்கு ஏற்பட்ட தீட்டு என்று உதாசீனம் செய்ய முடியாது ..."

— 'எண்ணம்' —
மேற்கு செருமனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பாவி மக்களைக் கொலை செய்வது எப்படி என அமெரிக்காவில் விசேடப் பயிற்சி பெற்ற எல்சல்வதோரின் அரச ஆயுதப்படையினர் சல்வதோரின் இடதுசாரி விடுதலைப் போராளிகளிடம் அடிவாங்கித் திரும்பும் காட்சி இது!

ஏகாதிபத்தியத்திற்கெதிரான விடுதலைப் போராளிகளின் போராட்டம் ஒருமுனைப்படுக்கப்பட்டதால் வெற்றிகள் குவிகின்றன அவ் வீரர்களுக்கு! தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒருமுனைப்படுத்தப்பட்டால் வெற்றிகள் குவியும் ... விடுதலை விரைந்து வரும்!

*****************************************

"தமிழ் முரசு"டனை சகல தொடர்புகளுக்கும்:

TAMOUL MOURASSOU,
8, Rue Charles Moureu,
75013 - PARIS

## வெளியீடு

## தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org